# சமூக அறிவியல்

## பகுதி - 1

## வகுப்பு V

**Social Science**
**Part 1**
**Std V**
**Tamil Medium**



கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2024

ST-535-1-SOC. SCI. (T)-5-VOL-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# 5

# சமூக அறிவியல்

*Prepared by*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First edition: 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே,

ஐந்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாட புத்தகம் தான் இது. முன் வகுப்புகளில் சுற்றுச்சூழல் புத்தகத்தின் ஒரு பகுதியாக அறிவியல் பாடமும், சமூக அறிவியல் பாடமும் சேர்ந்து நாம் படித்திருந்தோம். அதிலிருந்து சற்று மாறுபட்டு சமூக அறிவியலை ஒரு தனிப்பாடமாக நாம் படிக்க இருக்கிறோம். அன்றாட வாழ்க்கையில் நாம் காண்கின்ற, ஈடுபாடுகின்ற பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாடு, அரசியல் அமைப்புகளைக் குறித்து அறியவும் நாம் வாழ்கின்ற உலகத்தில் உள்ள சமூக மாற்றங்களை விளக்கவும் தகுந்த முறையில் இந்தப் பாடப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் கல்வியிலிருந்து சமூக அறிவியல் பாடத்திற்கு நுழைவதற்காகத்தான் பீலியின் கிராமம் என்ற, பாடப் பகுதி படக்கதை வடிவத்தில் தரப்பட்டுள்ளது. சமூகத்தில் வாழ்வதற்குரிய அறிவை உருவாக்குவதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் இப்பாடப்பகுதி உதவியாக இருக்கும்.

"உணவும் மனிதனும்" என்ற பாடப்பகுதியில்  உணவுப் பழக்கத்தின் தொடக்கமும் வளர்ச்சி நிலைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வருகின்ற  'பல்வேறு தொழில்கள்' என்ற பாடப்பகுதி, வாழ்க்கை வாழ்வதற்கும் எதிர்கால வாழ்க்கைக்காகவும் மனிதர்கள் ஈடுபடுகின்ற பல்வேறு தொழில்களும், உழைப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது. ஆடைகளின் தொடக்ககாலமும், காலநிலை, பண்பாடு என்பவை ஆடை அலங்காரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களைக் குறித்தும் "ஆடை – கடந்து வந்த பாதை" என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

நிலப்பட வாசிப்பின் முக்கியத்துவம் அன்றாட வாழ்க்கையில் அவற்றின் பயன்பாடு இவற்றை விளக்குவதற்கு "வரைவோம் வாசிப்போம்" என்ற பகுதி ஏற்புடையதாகும்.

நாம் வாழ்கின்ற சமூகத்தில் உள்ள ஆட்சி அமைப்பு முறையைக் குறித்தும் தேர்தல் நடைமுறைகளைக் குறித்தும் அடிப்படை அறிவு பெறுவதற்கு "மக்கள் மக்களால்" என்ற பாடப்பகுதி உதவுகிறது.

சீரமைக்கப்பட்ட கேரள பாடத்திட்ட பாட ஏற்பாடு 2023 முன்வைக்கும் சமூக அறிவியல் பாட அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள ஐந்தாம் வகுப்பு சமூக அறிவியல் பகுதி 1 உங்களின் எதிர்காலத்திற்கு உதவும் ஓர் அரிய சொத்தாகும் என நம்புகிறேன். சமூகத்தை ஆழமாகப் புரிந்துகொள்ளவும் மனித மதிப்புகளை உட்கொள்ளவும் இந்தப் புத்தகம் பயன்மிக்க ஒன்றாகும் என்பது உறுதி.


**முனைவர். ஜெயபிரகாஷ். ஆர்.கெ**
இயக்குநர்
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# TEXTBOOK DEVELOPMENT TEAM

## Advisor

**Dr. K.N. Ganesh**
Chairman
Kerala Council for Historical Research

## Chairperson

**Dr. Abhilash Kumar K.G**
Assistant. Professor
Department of Political Science,
B.J.M. Govt. College, Chavara

## Experts

**Dr. Nandakumar B. V.**
Assistant Professor
Department of History
Sree Narayana College,
Varkala

**Dr. Suresh Babu G.S.**
Professor in Sociology of Education,
Zakir Hussain Center for Educational Studies
Jawaharlal Nehru University,
New Delhi

## Participants

**Achuthankutty K.**
UPST (Retd.)
AUP School Irumpalassery,
Palakkad

**Pavithan C.K.**
HST (Retd.)
GHSS, Kaniyampatta,
Wayanad

**Nisha T. S.**
UPST
S.N.V. UPS,
Marutamanpally, Kollam

**Venugopalan K.**
BPC (Retd.)
Pattambi, Palakkad

**Santosh Veliyannoor**
Artist, Kottayam

**Beena. T.Chandapilla**
UPST,
Govt. UPS, Kozhancherry,
Pathanamthitta

**Pushpangadan U.**
UPST
GHSS Anchal,
Punalur, Kollam

**Radhakrishnan P.**
UPST (Retd.)
GLP School Alur, Palakkad

**Anas N. S.**
Research Scholar
NSS College, Nilamel,
Kollam

**Vishnu P.S.**
Artist, Nemom,
Thiruvananthapuram

**Benoy V.**
Principal
GHSS, Payambra,
Kozhikode

**Margaret Lini V.P.**
HST
Govt.V&HSS, Vellanadu,
Thiruvananthapuram

**Valsala Kumari K.R.**
HST (Retd.)
PBMHSS, Kodungallur,
Thrissur

**Niketan M.**
Student (+1), GHSS
Medical College Campus,
Kozhikode

## Tamil Version

### Experts

**Dr. Rajendran**
Associate Professor (Rtd.), University College, Thiruvananthapuram.
**Dr. Nisha Raffi**
Associate Professor (Rtd.), University College, Thiruvananthapuram.

### Members

**Aji Prakash M.H,** UPST, GHS Koovakkad, Kollam.
**Monivannan C**, PD Teacher (Rtd.) GTLPS Chalai, Thiruvananthapuram.
**Russel Raj R,** HM (Rtd.) ALPS, Pullivasal, Munnar, Idukki.
**Selvakumar R,** ALPS, Periyavarai, Munnar, Idukki.

### Academic Coordinator

**Dr. Anjana V. R. Chandran**
Research Officer, SCERT KERALA

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


1. பீலியின் கிராமம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 7 - 26
2. உணவும் மனிதனும் . . . . . . . . . . . . . . . . . . . . 27 - 39
3. பல்வேறு தொழில்கள் . . . . . . . . . . . . . . . . . . . 40 - 49
4. ஆடை கடந்து வந்த பாதை. . . . . . . . . . . . . . . 50 - 65
5. வரைவோம் வாசிப்போம் . . . . . . . . . . . . . . . 66 - 83
6. மக்கள் மக்களால் . . . . . . . . . . . . . . . . . . . . . . 84 - 98


இப்புத்தகத்தில் கற்றலை எளிமையாக்க
சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அதிக வாசிப்பு (மதிப்பிடத் தேவையில்லை) | வினாக்கள் |
| செயல்பாடு | தொடர்செயல்பாடு |
| கலந்துரையாடலாம் | வண்ணம் கொடுப்போம் |
| படச்சேகரிப்பு | பாட்டுப்பாடலாம் |
| படக்கலவை (கொளாஷ்) | விளையாடலாம் |
| வாசிப்போம் | எழுதலாம் |
| உருவாக்குவோம் | அட்டை உருவாக்கலாம் |
| பாத்திரநடிப்பு (ரோள்ப்ளே) | வரையலாம் |
| தகவல் தொழில் நுட்பம் | |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.


அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

1

# பீலியின் கிராமம்



நண்பர்களே,

விடுமுறை முடிவடையப் போகிறது. அதற்குமுன் பீலி, நண்பர்களைத் தன் கிராமத்திற்கு அழைத்துள்ளாள். கிராமத்தைப் பார்க்க செல்வதற்கான ஆயத்தம் செய்துக்கொண்டிருந்தனர் பீலியின் நண்பர்கள் நால்வரும். உங்களுக்கு பயணம் செய்ய விருப்பம் தானே? நாமும் அவர்களோடு பீலியின் கிராமத்திற்குச் சென்று வருவோமா?

பயணம் செய்வதற்கு முன் நாம் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்வோம்.



என்பெயர் நீனு. என்னால் நடக்க இயலாது. நான் சக்கர நாற்காலியில் செல்வேன். எனது வீடு நகரத்திற்குப் பக்கத்தில் உள்ள அரசு ஊழியர்களின் குடியிருப்பில் உள்ளது. எனக்கு ஒரு தம்பி உண்டு.

என் பெயர் அப்பு. நகரத்திலுள்ள சேரியில் எனது வீடு உள்ளது. அம்மா மட்டுமே எனக்கு உண்டு. அம்மா துணி மில்லில் தொழிலாளியாகப் பணி செய்கிறார்.





என் பெயர் விக்கி. நகரத்தில் ஒரு குடியிருப்பில் நான் வசிக்கிறேன். என் அப்பா வியாபாரி. என் அம்மா சொந்தமாக ஜவுளிக்கடை நடத்துகிறார்.

என் பெயர் சமேலி. நாங்கள் அஸ்ஸாம் மாநிலத்தைச் சார்ந்தவர்கள். சில வருடங்களாக நானும் மாயும் பாப்பயும் கேரளத்தில் வசிக்கிறோம். எனக்கு ஐந்து வயதான போது நாங்கள் கேரளத்திற்கு வந்தோம். பிற மாநிலத்தில் இருந்து வந்தவர்கள் கூட்டமாக வாழுகின்ற இடத்தில் நாங்களும் தங்கி உள்ளோம்.



ஐந்தாவது நபராகஉங்கள் படத்தை வரைந்து சேர்த்து சுயமாக அறிமுகம் செய்துகொள்ளுங்கள்.

(இங்கே வரைந்து சேருங்கள்)

என் பெயர் ...................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

பிற மாநிலங்களிலிருந்து கேரளத்திற்கு தொழிலாளிகள் வருகின்றனர். அஸ்ஸாம், பீகார், மேற்கு வங்காளம், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களிலிருந்து நிறைய பேர் குடும்பத்தோடு வருகின்றனர். அவர்கள் தம் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் படிக்க வைக்கின்றனர். சமேலியும் கேரளத்தில் படிக்கிறாள். 'மா' என்றும் 'பாப்ப' எனவும் சமேலி அம்மாவையும் அப்பாவையும் அழைக்கிறாள்.



நீங்கள் சுயமாக அறிமுகம் ஆனீர்கள் அல்லவா? நீங்கள் கூறிய தகவல்களோடு உங்கள் பொழுதுபோக்கு, ஓய்வு நேரத்தை செலவிடும் முறைகள், விருப்பங்கள், கனவுகள் போன்றவை எழுதி விரிவுபடுத்தி சுயவிவரப்பட்டியல் (தனிநபர் விவரங்கள்) உருவாக்க முயலுங்கள். ஆசிரியையின் உதவியும் கிடைக்கும்.


## பயணத்திற்குத் தயார் ஆகலாம்.













நீங்களும் இவர்களோடு பயணத்திற்குத் தயாராகி இருக்கிறீர்கள் அல்லவா? உங்களுக்கும் சில கருத்துகள் இருக்கும். அல்லவா. கீழே உங்கள் படத்தை வரைந்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்?

பல்வேறு வாழ்க்கைச் சூழல்களிலிருந்து வந்த இவர்கள் எவ்வாறு நல்ல நண்பர்களாயினர்? இவர்கள் நண்பர்களாவதற்கான காரணங்களைக் கற்பனை செய்து வகுப்பில் பாத்திர நடிப்பு நடத்துங்கள்.



பயணம் செய்வதற்கு முன் நாம் முன்ஏற்பாடுகள் செய்வோமல்லவா? எங்கு? எதற்கு? எவ்வாறு? என்றெல்லாம் அதற்கேற்ப நமது மனதளவில் தயாராவோம். நாம் பயணத்திற்குப் பயன்படுத்தும் பையில் பொருட்களோடு நமது சிந்தனைகளும் சேர்ந்துவரும் அல்லவா? இவர்கள் கொண்டு செல்லும் பையில் என்னென்ன பொருட்கள் உள்ளன எனப் பார்ப்போம்.












நீங்கள் பயணம் செய்யும் பொழுது என்னென்ன பொருட்களைக் கொண்டு செல்வீர்கள். எவற்றைப் பற்றி எல்லாம் சிந்தனை செய்வீர்கள். உங்கள் பையையும் பொருட்களையும் வரைந்து எண்ணங்களையும் எழுதி வெளியிடுங்கள்.



## பீலியின் கிராமத்திற்கு







உங்களுக்கு பயணப்பாடல்கள் தெரியுமா? அவற்றைச் சேகரித்து வகுப்பில் குழுவாகப் பாடுங்கள். விருப்பமுள்ள ஒரு பயணப்பாடலை இங்கே எழுதுங்கள்.

# பீலியின் கிராமம்






நண்பர்கள் பீலிக்குக் கூறும் பதிலை எழுதுங்கள்




பீலியின் கிராமத்தைப் பற்றிய உங்கள் எதிர் பார்ப்புகள் யாவை?

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .


பீலியின் கிராமத்தின் ஒரு கற்பனைப் படத்தினை நோட்டுப் புத்தகத்தில் வரைந்து பாருங்கள் ஆசிரியையின் உதவியைப் பெறுங்கள்.








எனக்குச் சாப்பிடுவதற்கான உணவை வீட்டிலிருந்து கொடுத்து விட்டிருக்கின்றனர். நான் அதைச் சாப்பிடுகிறேன்.
ஏய்.... அவனுடைய கவுரவத்தப் பாரு.
மகனே, அதெல்லாம் எல்லா நாளும் சாப்பிடக் கூடியது தானே இதைச் சாப்பிட்டுப்பார்? இங்குள்ள வயலில் விளைந்த நெல்லில் ஆக்கிய அரிசிச் சோறாகும். மரச்சீனியும் உண்டு. பீலியின் அப்பா ஆற்றிலிருந்து பிடித்த மீன் கறியும் உண்டு. பீலியின் அப்பா தான் மீன்கறி வைத்தார்.
நான் இதுபோல் சுவையுள்ள உணவை இதற்கு முன் சாப்பிட்டதே இல்லை. எனது வீட்டில் இவை வாங்குவதில்லை.
பீலி...... மிகச் சுவையாக உள்ளது. நல்ல சுவை. இதை எவ்வாறு சமைப்பது எனச் சொல்லித் தர வேண்டும்.




நாம் பீலியின் அப்பாவை நேர்காணல் நடத்துவோமா? அதற்கான வினாக்களைத் தயாராக்குங்கள். ஆசிரியையின் உதவியும் பெறுங்கள்.






நண்பர்களுக்காக ஓர் உணவு தயாரிப்போமா? உங்கள் சுற்றுப்புறத்திலிருந்து கிடைக்கும் உணவுப்பொருட்களைப் பயன்படுத்தி, பெரியவர்களின் உதவியோடு உணவு தயார் செய்து வகுப்பிற்குக் கொண்டு வாருங்கள். கொண்டு வரும் உணவை எல்லோரும் சேர்ந்து பங்கிட்டு உண்ணலாம் அல்லவா?



ஒரே நகரத்தைக் குறித்து விக்கியும் அப்புவும் இரண்டு விதமானக் கருத்துக்களைக் கூறக் காரணம் என்ன?





வாருங்கள். பீலியின் அப்பாவுடன் சென்று இந்தக் கிராமத்தினர் எவ்வாறு மகிழ்சியாக இருக்கின்றனர் என்பதை பார்த்து வருவோம்.

நீங்களும் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் தருணங்களை அனுபவித்திருப்பீர்களல்லவா? எந்தெந்த சந்தர்ப்பங்களில் இதனை அனுபவித்திருப்பீர்கள்? என்னென்ன பொருட்கள் கிடைத்தால் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கும்? பள்ளியில் தொழில்நுட்ப (Digital) கருவிகளின் உதவியுடன் ஆசிரியரின் மேற்பார்வையில் "எனது மகிழ்ச்சிகள்" என்ற பெயரில் ஒரு சுயமி (செல்பி) காணொளி பதிவைத் தயாராக்குங்கள்.

## கிராமத்தின் அழகு


பீலியின் கிராமத்தின் வழியாக நடந்து அந்தக்கிராமம் எவ்வளவு சிறப்பாகவும், அழகாகவும் உள்ளது என்பதைக் கண்டு அறியுங்கள்.




உங்கள் ஊரில் அன்றாட சந்தைகள், வாரச் சந்தைகள், மாலை நேரச் சந்தைகள் இருக்குமல்லவா? பெரியோர்களுடன் சேர்ந்து அங்கே சென்று பார்த்து அங்கு நடைபெறும் நிகழ்வுகளை உற்றுநோக்கி குறிப்பு எழுதவும்.

பீலியின் அப்பா நண்பர்களுக்கு ஓலை தொப்பிகளும் கூடைகளும் ஆடைகளும் பரிசளித்தார்.

ஓலை, காகிதம் முதலானவையைப் பயன்படுத்தி என்னென்ன பொருட்கள் செய்யத் தெரியும்? நீங்கள் செய்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.


இந்தக் கிராமத்தில் ஏராளம்
குளங்கள் உள்ளன.
நானும் நண்பர்களும் நீந்தல்
படித்தது இந்தக் குளத்தில்தான்.
இவர்களெல்லாம்
மகிழ்ச்சியாக
இருப்பதைப்
பார்க்கும்பொழுது
எனக்கும் மகிழ்ச்சியாக
இருக்கிறது.
அறுவடைக்குப்பின் இரண்டாம் போகம்
பயிர் செய்வதற்காக உழுதிட்ட வயலில்
தான் காளைபூட்டு போட்டிகள்
நடைபெறும்.






உங்கள் ஊரிலும் பலவிதமான திருவிழாக்கள் நடைபெறுமல்லவா? திருவிழாக்கள், பண்டிகைகள், கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் முதலான கொண்டாட்டங்களைக் குறித்து பெரியவர்களுடன் கேட்டு அறிந்து ஒரு விளக்கக் குறிப்பு தயாராக்குங்கள். பெரியவர்களுடன் அவற்றைக் காண சென்ற அனுபவங்களை வகுப்பில் பங்கு வையுங்கள்.






பீலியும் நண்பர்களும் நீங்களும் கிராமத்தின் காட்சிகளைக் கண்டு இரவு திரும்பி வருகிறீர்கள். இந்த நேரத்தில் நாம் ஒரு பாடல் எழுதி பாடினால் எப்படி இருக்கும். 'எனது கிராமம்' என்ற பெயரில் ஒரு பாடலை எழுதலாம். நீங்கள் பார்த்த கிராமங்களும் பீலியின் கிராமமும் இணைந்து வரும் முறையில் ஒரு பாடலை எழுதி வகுப்பில் தாளத்திற்கு ஏற்ப பாடி வெளியிடுங்கள்.



நீங்கள் வாழ்கின்ற இடத்தில் நின்று வெளியே பார்த்தால் இரவுக்காட்சிகள் காணும் ஓர் இடத்தைக் கண்டுபிடியுங்கள். என்னென்ன காட்சிகளை நீங்கள் காண்பீர்கள்? நாம் அதனை வரைந்து பார்க்கலாமா? "எனது இரவும் ஆகாயமும்" என்ற பெயரில் நண்பர்கள் வரைந்த எல்லாப் படங்களையும் வைத்து வகுப்பில் ஒரு படக் கண்காட்சியினை நடத்துங்கள்.







உங்களுடன் பீலியின் கிராமத்திற்கு வந்த நண்பர்கள் அவர்களின் கருத்துக்களைக் கூறினார்கள் அல்லவா? உங்களுக்கும் பீலியின் கிராமத்தைப் பற்றி ஏதாவது சொல்ல இருக்கும் அல்லவா? கிராமக் காட்சிகள் உங்களை எவ்வாறெல்லாம் கவர்ந்தது என எழுதி வெளியிடுங்கள்.

பீலியின் கிராமத்திற்கு செல்வதற்கு முன் உங்களுக்கும் பீலியின் நண்பர்களுக்கும் மகிழ்ச்சியைக் குறித்தும் பீலியின் கிராமத்தைக் குறித்தும் மற்றவர்களின் வாழ்க்கையைக் குறித்தும் ஏராளமான முன் எண்ணங்கள் இருந்தல்லவா? அப்படிப்பட்ட எண்ணங்களுடன்தான் அதுவரை நீங்கள் உலகத்தைக் பார்த்தீர்கள். இந்தப் பயணத்தின் மூலம் நீங்கள் மனதில் வைத்திருந்த பல முன் எண்ணங்களையும் கை விட்டிருப்பீர்களல்லவா? புதிய சில அனுபவங்களையும் அறிவுகளையும் அடைந்தீர்களல்லவா? பீலியின் நண்பர்கள் கூறுவதைக் கேளுங்கள்.




நான்கு பேரும் முன்பிருந்த எண்ணங்களை மாற்றி விட்டனர் எனக் கூறியதைக் கேட்டீர்கள் அல்லவா? பீலியின் கிராமத்தில் நீங்களும் பயணித்தீர்களல்லவா? இந்தப் பயணத்தின் இடையே உங்களுக்கு என்னென்ன புதிய அனுபவங்கள் கிடைத்தன. உங்களின் அனுபவங்களை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## தொடர் செயல்பாடுகள்

1. கிராம, நகர பகுதிகளுடைய சிறப்புக்களைக் கண்டறிந்து படத்தொகுப்பு (ஆல்பம்) தயாராக்குங்கள்.
2. நீங்கள் வாழ்கின்ற பகுதியின் சமூகச் சிறப்புக்கள் அடங்கிய ஓர் ஒளிக்காட்சி ஆவணப்படத்தை ஆசிரியரின் உதவியுடன் தயாராக்குங்கள்.
3. 'எனது வட்டாரத்தில் திருவிழாக்கள்' என்ற கருப்பொருளில் ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்யுங்கள்.

   கருத்தரங்கில் உட்படுத்தப்பட வேண்டியவை:

   - சுற்றுச்சூழல்
   - உணவுமுறைகள்
   - விவசாயம்
   - சந்தை
   - விளையாட்டுக்கள், விளையாட்டு மைதானங்கள்
   - திருவிழாக்கள்
   - இரவு நேரக் காட்சிகள்

# 2

# உணவும் மனிதனும்

அக்டோபர் 16

*இன்று உலக உணவு தினத்தை முன்னிட்டு பள்ளிக்கூடத்தில் உணவுத்திருவிழா நடைபெற்றது. எவ்வளவு சந்தோஷமாக இருந்தது. ஆசிரியரின் ஆலோசனைப்படி வகுப்பு நண்பர்கள் அனைவரும் ஒவ்வொரு விதமான உணவைக் கொண்டு வந்தனர். நானும் எனது நண்பர்களும் ஒவ்வொரு அரங்கையும் பார்த்துச் சென்றோம். ஆஹா!.. எத்தனை வகையான உணவுகள், மரவள்ளிக்கிழங்கும் பலாப்பழமும் சிறுதானியங்களும் கிழங்குகளும் பழவகைகளும் பயன்படுத்தி செய்த உணவுகள்....... பாயாசம், லட்டு, அல்வா, கேக், மிட்டாய்கள், ஊறுகாய்கள், அவ்வாறு எத்தனை எத்தனை வகையான உணவுகள். இருந்தன? இதனைப் பார்த்து எனது நாவில் எச்சில் ஊறியது. அப்பொழுது ஆசிரியரும் எங்களுடன் இணைந்து கொண்டார். வகுப்பு ஆசிரியர் எங்களுக்கு மிட்டாய்களும் பாயாசமும் வாங்கித் தந்தார். எவ்வளவு சுவை! இப்பொழுதுக் கூட அதன் சுவை நாவிலிருக்கிறது.*

சிபி என்ற மாணவன் எழுதிய நாட்குறிப்பை வாசித்தீர்களல்லவா? என்னென்ன உணவு வகைகளைக் குறித்து இந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது?

- 
- 
- 

இவை தவிர வேறு என்னென்ன உணவு வகைகளை நீங்கள் சாப்பிட்டிருக்கிறீர்கள்? அவற்றின் ஒரு பட்டியலைத் தயார் செய்யுங்கள்.


நாம் சாப்பிடுகின்ற உணவிற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. அந்த வரலாற்றை அறிய உங்களுக்கு விருப்பமல்லவா?

## உணவு சேகரித்தல்

மனிதன் வாழ்வதற்கு இன்றியாமையாத காரணிகளில் ஒன்றே உணவு என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

எல்லா உயிரினங்களுக்கும் உணவு அவசியமாகும். ஆதி காலத்தில் இலைகள், பழங்கள், கிழங்குகள், தானியங்கள் என்பவை உயிரினங்களின் உணவாக இருந்தன. மேலும், சில உயிரினங்கள் பிற உயிரினங்களைக் கொன்று உண்டன. மனிதனும் ஆதிகாலத்தில் அவ்வாறே வாழ்ந்திருந்தான்.

கீழே தரப்பட்டுள்ள படங்களைக் கவனியுங்கள்





ஆதி மனிதனின் உணவுத் தேடுவது தொடர்பானவைகளைக் குறிக்கும் சில படங்கள் மேலே தரப்பட்டுள்ளன. இதிலிருந்து அந்நாட்களில் மனிதருடைய உணவுத் தேடலைக் குறித்து என்னென்ன விவரங்கள் உங்களுக்கு அறியமுடிகிறது?

- உணவைச் சேகரித்திருந்தனர்
-
-
-

வேட்டையாடியும் சேகரித்தல் வழியாகவும் அவர்களுக்கு என்னென்ன உணவுப் பொருட்கள் கிடைத்திருக்கும்?

- காய்கனிகள்
- வேர்கள், கிழங்குகள்
-
-


## தீயும் உணவும்

வேட்டையாடியும் பிற வழிகளிலும் கிடைத்த உணவுப் பொருட்களை ஆதி மனிதன் சமைத்து சாப்பிட்டிருப்பானா?



**நெருப்பு உற்பத்தியும் கட்டுப்படுத்தலும்**

காய்ந்த மரங்கள் ஒன்றுக்கொன்று உராய்ந்தும் பாறையில் உரசியும் தீ உண்டாவதை மனிதர்கள் கண்டனர். காய்ந்த மரம் பாறையில் உரசியோ கற்களை ஒன்றோடு ஒன்று உரசியோ தீ உண்டாக்கலாம் என அறிந்தனர்.



ஆதிகாலங்களில் நெருப்பின் உபயோகம் அறியாததினால் கிடைத்தவற்றை பச்சையாக அப்படியே சாப்பிட்டனர். ஆனால் நெருப்பைக் கட்டுப்படுத்தி பயன்படுத்த அறிந்தபின் அவர்கள் உணவை வேகவைத்து சாப்பிடத் தொடங்கினர்.

நெருப்பைப் பயன்படுத்த அறிந்தது மனிதர்களின் உணவுமுறையில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களில் ஒன்றாகும். காட்டுத்தீயில் இறந்த மிருகங்களின் மாமிசம்தான் அவர்கள் சாப்பிட்ட முதல் வெந்த உணவாக இருக்கலாம். நெருப்பு உண்டாக்கவும் கட்டுப்படுத்தவும் அறிந்தபின் மாமிசத்தையும் மீனையும் சுட்டு சாப்பிடத் தொடங்கினர். தொடர்ந்து வேர்களையும் கிழங்குகளையும் சுட்டு சாப்பிட்டனர். இவ்வாறுதான் மனிதன் உணவைப் பக்குவப்படுத்தி சாப்பிடும் வழக்கத்திற்கு மாறினான்.



அலைந்து திரிந்து நாடோடிகளாக வாழ்ந்த நாட்களில் மனிதர்கள் வேட்டையாடியும் சேகரித்தும் அன்றாட தேவைக்கான உணவை மட்டுமே தேடினர். பிற்காலத்தில் உணவைத் தேடுவதற்காக வேறு வழிகளை அவர்கள் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர்.




என்னென்ன சூழ்நிலைகளில் ஆதிமனிதன் உணவைத் தேடுவதற்குப் பிற வழிகளைப் பின்பற்ற தொடங்கினான்?

- உணவுப் பற்றாக்குறை
- மக்கள்தொகைப் பெருக்கம்
- சுற்றுச்சூழலில் ஏற்பட்ட மாற்றம்
-
-
-

## உணவு உற்பத்தி

நாளடைவில் மனிதர்கள் உணவுத்தேவைக்காக விலங்குகளை வளர்க்கவும் தாவரங்களை வளர்க்கவும் தொடங்கினர். உணவுத் தேவைக்காக முதன்முதலாக பேணி வளர்த்த விலங்கு ஆடு, செம்மறி ஆடு போன்றவைகளாகும்.





மனிதர்களுடன் முதலாவதாக இணக்கமாக இருந்ததும், மனிதன் இணக்கி வளர்க்கத் தொடங்கிய விலங்கு நாய். எனவே மனிதர்களுடன் இணக்கமாக வாழும் திறன் படைத்ததால் வேட்டையாடவும் காவல் காக்கவும் நாய்களைப் பயன்படுத்தினர்.ஆனால் விவசாயம் விரிவடைந்தவுடன் நாய்களுடன் பிற விலங்குகளையும் உணவுக்காகவும் பிற தேவைகளுக்காகவும் பழக்கி வளர்க்கத் தொடங்கினர்.

> விலங்குகளைப் பழக்கி வளர்க்கவும் தாவரங்களைப் பராமரிக்கவும் தொடங்கிய பின் என்னென்ன மாற்றங்கள் மனித வாழ்க்கையில் ஏற்பட்டது. தாவரங்களைப் பராமரித்தது எப்படி?

வீசி எறிந்த உணவுப் பொருட்களிலிருந்து புதிய செடிகள் முளைத்து வருவதைக் கவனித்த ஆதி மனிதன் விவசாயத்தைக் குறித்து சிந்திக்கத் தொடங்கினான். பாறை மீது விதை விதைத்தால் காய்ந்துபோகும். தண்ணீரில் விதை போட்டால் அழுகிப்போகும். ஆனால் ஈரமும் சூடுமுள்ள மண்ணில் விதை விதைத்தால் முளைக்கும் என்பதைப் புரிந்துக்கொண்டனர். இவ்வாறு விவசாயம் தொடங்கியது. இதனைத்தொடர்ந்து உணவுக்கேற்ற செடிகளையும் வேர்களையும் மரக்கன்றுகளையும் தேர்ந்தெடுத்து நடவும் விவசாயம் செய்யவும் தொடங்கினர். கோதுமை, பார்லி, சாமை, கிழங்கு வகைகள் ஆதிகாலத்தில் பயிர் செய்யப்பட்டவை. விவசாயத்திற்கு தேவையான தண்ணீரும் வளமான மண்ணும் கிடைக்கும் நதிக்கரையோரங்களில் விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். இதற்குப் பின்னர் உணவு தேடி அலைந்து திரிந்த மனிதர்கள் விவசாய இடங்களுக்கு அருகில் நிரந்தரமாக வாழத் தொடங்கினர்.

விவசாய இடங்களுக்கு அருகில் நிரந்தர வாழ்விடம் ஏற்படுத்தியதால் மனிதர்களுக்கு என்னென்ன நன்மைகள் ஏற்பட்டன?

- விவசாய இடங்களைப் பாதுகாக்க முடிந்தது
- உணவைத் தேடி அலைய வேண்டியதில்லை
- உணவு கிடைப்பது அதிகரித்தது
- ஓய்வு நேரம் அதிகரித்தது

> ஆதிமனிதர்களுக்கு நிரந்தர வாழ்விடம் உறுதிசெய்ய நதிக்கரை ஓரங்கள் எவ்வாறெல்லாம் உதவியாக இருந்திருக்கும்? கலந்துரையாடுங்கள்

## உணவுப் பொருட்கள் சேகரிப்பு

ஆதிகால மனிதர்கள் அன்றாடத் தேவைக்கான உணவை மட்டுமே சேகரித்தனர். ஆனால் விவசாயம் வளர்ச்சியடைந்தவுடன் மனிதர்களுக்குத் தேவைக்கு அதிகமான உணவு கிடைத்தது. அன்றாடத் தேவைக்குப் போக மீதமான உணவைச் சேமித்து வைக்கத் தகுந்த வசதிகள் தேவைப்பட்டன. மீதமுள்ள உணவுப் பொருட்களை அவர்கள் எவ்வாறெல்லாம் பாதுகாத்து வைத்திருப்பார்கள்?

> **ஆதிகால விவசாயக் கருவிகள்**
>
> கல், கம்பு, கொம்பு, எலும்பு என்பவைதான் ஆதிகால மனிதர்களின் விவசாயக் கருவிகள். மண்ணைப் பண்படுத்தி விதையை நட இந்தக் கருவிகள் உதவின.

- மண் பாத்திரங்கள்
- விலங்குகளின் தோலால் செய்த பைகள்
- மூங்கில்களால் செய்த கூடைகள்



மண்கட்டியைத் தண்ணீரில் போட்டால் கரைந்து போகும். ஆனால் மண்ணைக் குழைத்து சுட்டு எடுத்தால் தண்ணீரைச் சேமிக்கவும் சூடாக்கவும் முடியும் என்பதை மனிதர்கள் புரிந்துக்கொண்டனர். முன்காலங்களில் களிமண்ணைக் குழைத்துக் கைகளால் மண் பாத்திரங்கள் செய்தனர். விவசாயம் வளர்ச்சி பெற்றவுடன் உணவுப்பொருட்களைப் பாதுகாக்க பல பெரிய மண்பாத்திரங்கள் தேவைப்பட்டன. மண்பானையை உணவு சமைக்கவும் உபயோகித்தனர். மண்பாத்திரங்கள் செய்ய சக்கரம் கண்டுபிடித்தது மனித வரலாற்றில் ஒரு முக்கிய மாற்றமாகும். இது மண்பாத்திரம் தயாரிப்பு விரிவடைவதற்கு காரணமானது. உணவுப்பொருட்கள் சேகரித்துப் பாதுகாத்து வைப்பதற்கு முற்காலத்தில் உணவுத் தானிய சேகரிப்பு அறைகள் செயல்பட்டிருந்ததற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

**தானியக் களஞ்சியம் (Granary)**

பழங்கால இந்தியாவில் நிலை பெற்றிருந்த நதிக்கரை நாகரிகம்தான் சிந்துவெளி அல்லது ஹரப்பா நாகரிகம். இங்குள்ள சிறப்புக்களுள் முக்கியமானதுதான் தானியக்களஞ்சியம். அவை செங்கற்கள் பயன்படுத்திக் கட்டப்பட்டிருந்தது. தொலைவிலுள்ள கிராமங்களிலிருந்து தானியங்கள் கொண்டு வந்து இந்தத் தானியங்களஞ்சியங்களில் பாதுகாக்கப்பட்டிருந்தது.

நமது நாட்டில் தானியங்கள் சேகரித்து வைப்பதற்கு ஜாடிகள், குதிர்கள் என்பன உபயோகித்திருந்தனர். இவை மட்டுமல்லாது வேறு என்னென்ன உணவுத் தானிய சேகரிப்பு முறைகள் அன்றைய மனிதர்கள் பின்பற்றியிருந்தனர். முதியவர்களிடம் கேட்டு அறிவீர்களா?

உணவு சமைக்கவும் சேகரிக்கவும் என்னென்ன பாத்திரங்களை உங்கள் வீட்டில் பயன்படுத்துகிறீர்கள்?

## தானியங்களின் பகிர்வு

ஆதிகால மனிதர்கள் தேவைக்கு அதிகமான உணவுப்பொருட்களை வருங்கால உபயோகத்திற்காகப் பாதுகாத்து வைக்க மட்டுமா செய்திருந்தனர்?

தேவைக்கு அதிகமான உணவுப்பொருள்களைப் பிற்காலத்தில் பயன்படுத்த சேமித்து வைப்பது மட்டுமல்ல. அவை தேவைப்படுவோருக்குப் பகிர்ந்து கொடுக்கவும் செய்தனர்.

அன்று இதுபோன்ற உணவுப்பொருள்கள் பகிர்வு எப்படி நடந்திருக்கும்?

தனக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் சேகரித்தவற்றை பிறருக்குப் பகிர்ந்தனர்.

## தென்னிந்தியாவில் உணவுத்தானியங்களின் கைமாற்றம்



ஏறத்தாழ 1500 வருடங்களுக்கு முன்பு தென்னிந்தியாவில் உணவுத் தானியங்களின் கைமாற்றம் நிலைநின்றிருந்ததாக சங்ககால இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்திலுள்ளவர்களிடம் இருந்து அவர்கள் சேகரித்த உணவுப்பொருள்களைக் கொடுத்தும் பிறரிடம் இருந்து தங்களுக்குத் தேவையானவற்றை பெற்றுக்கொள்வதும் வழக்கம். கடற்கரையில் வாழ்ந்தவர்கள் மற்ற பகுதிகளில் வாழ்ந்தவர்களுக்கு காயவைத்த மீன், உப்பு போன்றவற்றைக் கொடுத்து அதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து வேறு உணவுப் பொருள்களையும் வனவளங்களையும் பெற்றுக்கொண்டனர். வனப்பகுதியிலுள்ளவர்கள் பிற இடங்களில் உள்ளவர்களுக்கு வனவளங்களைக் கைமாறி உள்ளனர். சமவெளிகளில் வாழ்பவர்கள் தங்களின் விவசாயப் பொருட்களைப் பிற பகுதியிலுள்ளவர்களுக்குக் கைமாறினர்.

### பண்டமாற்று முறை

நாணயம் நடைமுறையில் வருவதற்கு முன்பு பொருட்களை ஒருவருக்கொருவர் கைமாறி கொடுக்கும் முறை நடைமுறையில் இருந்தது. இம்முறைக்குப் பண்டமாற்று முறை எனப்பெயர்.

இதைப்போன்ற பண்டமாற்று முறை சமூகத்தில் பல மாற்றங்களுக்கு வழிசெய்தது. பொருள் மாற்றுவது பின்னர் வியாபார முறைக்கு வழிவகுத்தது. அதன்வழி சந்தைகள் உருவாகின. சந்தைகள் பின்னர் வியாபார நிறுவனங்களாக மாறின. பொருள்கள் வாங்கவும் விற்கவும் மக்கள் கடைகளுக்கு வந்துசென்றனர். நாளடைவில் அவை நகரங்களாக மாறின.

முன்காலங்களில் கேரள மக்கள் உணவுப் பொருட்களைச் சேகரிக்கவும் தொலைதூரத்திற்குக் கொண்டு செல்லவும் கைமாறவும் என்னென்ன பொருட்களையும் வழிகளையும் பயன்படுத்திருப்பர்? கலந்துரையாடுங்கள்.

நகரங்கள் உருவானதைக் குறிக்கும் ஒழுகு படத்தை முழுமையாக்கவும்.

பொருட்கள் கைமாற்றம்/ பண்டமாற்றம்
↓
.............................................
↓
.............................................
↓
.............................................
↓
நகரங்கள்



பொருட்களின் பண்டமாற்றமும் நகரங்களின் வளர்ச்சியும் என்ற கருத்தை அடிப்படையாக்கி கலந்துரையாடி கொளாஷ் (படக்கலவை படம்) உருவாக்கி வகுப்பில் காட்சிப்படுத்தவும்

## நாடுகளைக் கடந்தும் பண்டமாற்றம்

உணவுப்பொருட்களின் பண்டமாற்றம் ஒரு பகுதியில் மட்டும் ஒதுங்கி நிற்கவில்லை. நாடுகள் கடந்தும் பண்டமாற்றம் வளர்ந்திருந்தது. பழங்காலம் முதல் நமது நாடு வெளிநாடுகளுடன் பண்டமாற்று செய்திருந்தது. ரோமானியர்கள், சீனர்கள், அரேபியர்கள், பாரசீகர்கள், யூதர்கள் என்பவர்களுடன் முக்கியமாக பண்டமாற்றம் நடைபெற்றிருந்தது.





படத்தில் தரப்பட்டுள்ள வாசனைப்பொருட்களைக் கண்டறிந்து ஒவ்வொன்றைக் குறித்தும் எளிய குறிப்பு தயார் செய்யவும்.













இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு முக்கியமாக பண்டமாற்றம் செய்யப்பட்டவை. நல்ல மிளகு, ஏலக்காய், இஞ்சி, கிராம்பு, கருவப்பட்டை முதலான வாசனைப் பொருட்களாகும். இவற்றில் வெளிநாட்டினருக்கு மிகவும் விருப்பமானது கருப்புத் தங்கம் என்று அழைக்கப்படும் நல்ல மிளகு ஆகும்.



இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசிய பயணியான வாஸ்கோடகாமா திரும்பி ஐரோப்பாவிற்குச் சென்ற போது பயணச்செலவின் அறுபது மடங்கு மதிப்பு வரும் பொருட்களைக் கொண்டு சென்றார் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன.



வாஸ்கோடகாமா



உங்கள் பகுதியில் தற்போது விவசாயம் செய்யப்படும் வாசனைப்பொருட்கள் எவையெனக் கேட்டறிந்து எழுதுங்கள்.

வியாபாரத்தின் வளர்ச்சிதான் பிற்காலத்தில் தொலைதூரப் பிரதேசங்களுக்கு இடையே உணவுப்பொருட்களின் பண்டமாற்றத்திற்கு வழிவகுத்தது. இதுபோன்ற பண்டமாற்றத்தின் பலனாக இந்தியாவில் நடைமுறையில் வந்த சில உணவுப்பொருட்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



கொய்யா



பப்பாளி



அன்னாசிப்பழம்



முந்திரி



மரச்சீனி



உருளைக்கிழங்கு

படத்தில் கொடுக்கப்பட்டுள்ள எல்லா உணவுப் பொருட்களும் உங்களுக்குத் தெரியுமல்லவா? இவற்றின் பிறப்பிடம் நமது நாட்டில் தானா என விசாரித்து அறியுங்கள்.



அடையாள அட்டை தயாரிப்போம்

கொய்யா



பிறந்த நாடு : மெக்ஸிகோ
வெப்ப மண்டலத்தின் ஆப்பிள்
போர்த்துகீசியர்கள் இந்தியாவிற்கு கொண்டு வந்தனர்.
வைட்டமின் ஏ, பி, சி என்பன அடங்கியது.



..............................

......................................

......................................

..................................................................

இதுபோன்று பிற பொருட்களின் தாய்நாட்டைக் கண்டுபிடித்து அடையாள அட்டை தயாரிக்கவும். நீங்கள் தயாரித்த அட்டைகளை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.

உணவுப்பொருட்களின் பண்டமாற்றம் தற்போதும் தொடர்கிறது. வியாபாரம் மட்டுமல்லாது தொழில் தேடியும் கல்வி பெறுவதற்கும் உல்லாச பயணத்திற்கும் உலகின் பல பகுதிகளுக்கும் மனிதர்கள் பயணித்துக் கொண்டிருப்பது வளர்ச்சியடைந்து இன்று இப்பரிமாற்றம் அதிகமாகப் பரவி வருகிறது.

வியாபாரத்தின் வளர்ச்சி தொலைதூர நாடுகளுக்கிடையே உணவுப்பொருட்களின் கைமாற்றத்திற்கு வழிவகுத்தது எவ்வாறு?

நாம் சாப்பிடும் பல பழவகைகளும் பிற உணவுப்பொருட்களும் பல நாடுகளிலிருந்தும் நம் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகும். என்பதை அறிந்துகொண்டீர்கள் அல்லவா? பிற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்து சேர்ந்த உணவுத் தானியங்களின் ஒரு பட்டியல் தயாராக்குங்கள். அவற்றின் தாய்நாடு எது எனக் கண்டறியுங்கள்.

## உணவும் சமத்துவமின்மையும்

உணவுடன் தொடர்புடைய பல விதமான சமத்துமின்மை நம் நாட்டில் நிலவி இருந்தது. சமூக ரீதியான சமத்துவமின்மைகள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்வதில் தடையாக இருந்தது. இப்பாகுபாட்டிற்கு எதிராக சமூக சீர்திருத்தவாதியான சகோதரன் அய்யப்பனின் தலைமையில் எர்ணாகுளம் செராயியில் சமபந்தி நடத்தினர்.

### சமபந்தி உணவு

1917 மே 29 ஆம் தேதி பல்வேறு சாதி மக்கள் ஒன்றிணைந்து சகோதரன் அய்யப்பனின் தலைமையில் எர்ணாகுளம் மாவட்டத்தில் செராய் என்னுமிடத்தில் சமபந்தி நடத்தினர். அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்பதற்கான உரிமை மறுக்கப்பட்டதற்கு எதிராக இப்போராட்டம் நடத்தப்பட்டது. சமபந்தி உணவு நடத்த தலைமை தாங்கியதால் தனது சமூகத்திலிருந்து பல இடையூறுகளைச் சகோதரன் அய்யப்பன் சந்திக்க நேரிட்டது. கேரளத்தில் நடைமுறையில் இருந்து வந்த சமூக சமத்துவ மின்மையைத் தான் இது வெளிப்படுத்துகிறது.



சகோதரன் அய்யப்பன்

உணவு அடிப்படையிலான சாதி பாகுபாடு இன்றும் கேரளத்தில் காணப்படுகிறதா? இப்படிப்பட்ட பாகுபாடுகள் நமது நாட்டின் சட்டங்கள் மூலம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. சமூக பாகுபாடு மட்டுமல்லாமல் பொருளாதார முறையிலான பாகுபாடும் உணவு முறையில் சமத்துவத்திற்குச் சவாலாக இருக்கிறது.

'உணவில் சமத்துவமின்மை' என்பதைக் குறித்து ஒரு குறிப்பு தயாராக்குங்கள்.

## பட்டினி காட்சிகள்

**இந்தத் தலைப்புச் செய்திகளைக் கவனியுங்கள்**




என்னென்ன விவரங்களை இந்தச் செய்திகள் மூலம் நீங்கள் புரிந்துக்கொண்டீர்கள்?

- உலகின் பல பகுதிகளிலும் இன்றும் பட்டினி நிலவி வருகின்றது.
- 
- 
- 

ஆரோக்கிய பாதுகாப்பிற்குத் தேவையான உணவு எல்லா மனிதர்களின் உரிமையாகும். ஆனால் உயிர்வாழ ஒருவேளை உணவு கூட கிடைக்காத ஆயிரக்கணக்கானோர் உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ளனர். காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், போர், வேலைவாய்ப்பின்மை போன்றவை வறுமைக்கும் பட்டினிக்கும் காரணமாகின்றன.

### வங்காளத்தில் உணவுப்பஞ்சம்



*வங்காளத்தில் பஞ்சம் நிலவிய பகுதிகளில் உணவுக்காகக் காத்திருந்த மக்கள் கூட்டம்*

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் அளவுக்கதிகமான பொருளாதாரச் சுரண்டல்கள் உணவுப்பஞ்சத்திற்கும் பலர் உயிரிழக்கவும் காரணமாயின. இதற்கு எடுத்துக் காட்டுதான் 1943 இல் வங்காளத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை.

வங்காள மக்களின் முக்கிய வாழ்க்கைத்தொழில் விவசாயம். வங்காளத்தின் கடலோரத்தில் வீசிய கொடுங்காற்றினால் அங்கு பயிர் செய்யப்பட்ட நெல் பயிர்கள் முற்றிலும் அழிந்தன. இதைத் தொடர்ந்து வங்காளத்தில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதில் சுமார் 30 இலட்சம் பேர் பட்டினியால் உயிரிழந்தனர்.

பொருட்கள் வழங்குவதில் சமநிலையின்மை இதற்கு மற்றொரு காரணமாகும். அனைவருக்கும் சரிவிகிதத்தில் வழங்காத காரணத்தால் சிலர் உணவு உண்ணவும் சிலர் பட்டினி கிடக்கவும் வேண்டியநிலை உருவாகின்றது. வறுமைக்கும் பட்டினிக்கும் எதிரான செயல்பாடுகளை ஊக்கப்படுத்துவதுடன் அனைவருக்கும் உணவு உறுதி செய்யவும் வேண்டும் என்ற இலட்சியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 ஆம் தேதியை உலக உணவுத் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. வறுமையை அகற்றுவதற்காகப் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி கேரளம் பிற மாநிலங்களுக்கு ஒரு மாதிரியாக மாறியது. வறுமையை ஒழிக்க கேரள அரசு நடைமுறைப்படுத்தி வரும் குடும்பஸ்ரீ திட்டம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்** (National Food Security Act 2013)



தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 இல் நடைமுறைக்கு வந்தது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்வது என்பதுதான் இச்சட்டத்தின் நோக்கம். இந்த நோக்கத்தை அடிப்படையாக்கி செயல்படுத்தும் ஒரு நியாய விலைக்கடை அமைப்பு நமது நாட்டில் உள்ளது.



உணவு நாள் செய்திகள் அடங்கிய அறிவிப்பு அட்டைகள் தயாரித்து பள்ளிக்கூடத்தில் உணவு நாள் ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள்.










பட்டினியில்லாத உலகை உருவாக்க நாம் ஒவ்வொருவரும் என்னென்ன செய்ய இயலும்? கலந்துரையாடுங்கள்.

## உணவும் உடல் ஆரோக்கியமும்

மனிதனின் உயிரை நிலைநிற்கச் செய்யும் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றல்லவா உணவு? உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உணவு முக்கிய பங்கு வகிக்கிறது. சத்தான சரிவிகித உணவு உண்பதன் வழி நமது உடலும் மனமும் ஆரோக்கியமாக இயங்குகிறது. ஆனால் ஆரோக்கியமற்ற உணவுமுறை பல வாழ்வியல் நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.

### 2023 அகில உலக சிறுதானிய ஆண்டு

ஐக்கிய நாட்டு சபையின் அறிவுறுத்தலின்படி 2023 ஆம் ஆண்டை அகில உலக சிறு தானிய ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. '**சிறுதானியங்களின் உற்பத்தியும் பயன்பாட்டையும் ஊக்கப்படுத்துதல்**' என்பது அகில உலக சிறு தானிய ஆண்டு கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகும். புல்லினத்தில் உட்படும் தானியப் பொருட்கள் தான் சிறுதானியங்கள். சோளம், கேழ்வரகு, வரகு அரிசி, தினை முதலானவை சிறுதானியங்களாகும். இதயம் தொடர்பான பிரச்சினைகளையும் பிற வாழ்வியல் முறை நோய்களையும் கட்டுப்படுத்த சிறு தானியங்களுக்கு இயலும். அதனால் சத்துக்கள் நிறைந்த சிறுதானியங்களை நமது உணவில் தினந்தோறும் உட்படுத்த வேண்டும்.


கேழ்வரகு


மக்காச்சோளம்


பார்லி


வரகு


கம்பு


தினை

'ஆரோக்கியமற்ற உணவுமுறைகளும் வாழ்வியல் நோய்களும்' என்ற தலைப்பில் குறிப்பு ஒன்று எழுதுங்கள்.

உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டியது எல்லா மக்களின் சட்டப்பூர்வமான உரிமையாகும்.நமக்கு கிடைக்கும் உணவை கவனமாகப் பயன்படுத்த வேண்டும். உணவை வீணாக்குதல் என்பது ஒரு நேர உணவுக்கூட கிடைக்காமல் இருக்கக்கூடியவர்களுக்கு நாம் செய்யும் கொடுமையாகும். மற்றவர்களுக்கும் உரிமையான உணவை நாம் வீணாக்குகிறோம் என்ற அறிவு நம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

## தொடர்செயல்பாடுகள்

1. நீங்கள் சாப்பிடும் உணவுப்பொருட்கள் தான் உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்கள் அவர்களின் சிறுவயதில் சாப்பிட்டனரா? வீட்டில் முதியோர்களிடம் விசாரித்து விவரங்கள் சேகரித்து நோட்டுப்புத்தகத்தில் எழுதுங்கள். சேகரித்த விவரங்களின் அடிப்படையில் படங்களையும் சேகரித்து உணவு சாப்பிடும் முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ற தலைப்பில் ஒரு கையெழுத்து இதழ் தயாராக்குங்கள்.

2. போர், வறட்சி, வெள்ளப்பெருக்கு முதலான மனிதர்களால் ஏற்படுவதும் அல்லாததுமான பேரழிவுகள் மூலம் உலகத்தின் உணவுப் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் எவ்வாறு உண்டாகிறது? ஒரு படக்காட்சிக்கு ஏற்பாடு செய்யவும்.
3. பழைய காலங்களில் தானியங்களை சேமிக்கவும் உணவு தயாரிக்கவும் பயன்படுத்திய சேமிப்புக் கிடங்குகள், பாத்திரங்கள் இவற்றின் படங்களைச் சேகரித்து பள்ளிக்கூடத்தில் ஒரு கண்காட்சி நடத்தவும்.
4. சிறுதானியங்களைச் சேகரித்து சார்ட் அட்டையில் ஒட்டி எளிய விளக்கத்துடன் வகுப்பில் காட்சிப்படுத்தவும் அத்துடன் உணவுத்திருவிழாவையும் பள்ளிக்கூடத்தில் நடத்தவும்.
5. உங்கள் பள்ளிக்கூட காய்கறித் தோட்டத்தில் விளையும் உணவுப் பொருட்களைப் பற்றி ஒரு குறிப்பு தயாரிக்கவும்.
6. உங்கள் பகுதியில் விவசாய நிலங்கள், உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையங்கள், உணவகங்கள் என்பவை உட்படுத்திய ஒரு வரைபடம் வரைந்து காட்சிப்படுத்தவும்.
7. "ஆரோக்கியமான உணவு முறை" என்ற தலைப்பில் சுகாதாரப் பணியாளர்களுடன் நேர்காணல் நடத்தவும்.

# 3

# பல்வேறு தொழில்கள்



நாள்தோறும் வீட்டில் உள்ள பூந்தோட்டத்திற்கு முறையாகத் தண்ணீர் ஊற்றும் கீர்த்திக்கு அவளது அப்பாவும் அம்மாவும் மிட்டாயைப் பரிசாக வழங்குகின்றனர்.



வீட்டில் துணிகளை ஒழுங்காக அடுக்கி வைத்ததற்காக தேஜஸிற்கு அப்பாவும் அம்மாவும் கதைப்புத்தகத்தினைப் பரிசாக வழங்குகின்றனர்.

மேலே கொடுக்கப்பட்ட படங்களைக் கவனித்தீர்களல்லவா?

பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றிய கீர்த்திக்கு என்ன பரிசு கிடைத்தது?

•

வீட்டிலுள்ள ஆடைகளை அடுக்கி வைத்ததற்கு தேஜஸை பெற்றோர்கள் எவ்வாறு பாராட்டினர்?

•

உங்கள் வீட்டிலுள்ள பெரியவர்கள் செய்யும் வேலைக்கு பிரிதிபலனாக என்ன கிடைக்கின்றது?

## வருமானம்

படங்களை உற்றுப்பாருங்கள்















பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களின் படங்கள் தரப்பட்டுள்ளதைக் கவனித்தீர்களல்லவா? ஒவ்வொருவரும் என்னென்ன செயல்களில் ஈடுபட்டுள்ளனர்?

- வியாபாரம்
-
-
-
-
-

இதில் என்னென்ன வேலைகளுக்கு பிரதிபலனாகப் பணம் கிடைக்கிறது.

- ஆசிரியர் வேலை
-
-

என்னென்ன செயல்களுக்குப் பரிசு கிடைக்கின்றது?

-
-
-

நாம் செய்யும் சில செயல்களுக்குப் பரிசுகளும் சிலவற்றிற்கு சம்பளமும் கிடைக்கிறது. ஆசிரியர் வேலை, வியாபாரம், மருத்துவச்சேவை போன்றவற்றிற்குப் பிரதிபலனாகப் பணம் கிடைக்கிறது. பல்வேறு பொருளாதார செயல்களில் ஈடுபடுவதின் வாயிலாக தனிநபர் ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவில் கிடைக்கும் பணமே வருமானம் எனப்படும். இவ்வாறு பணம் பிரதிபலனாகக் கிடைக்கும் வேறு செயல்கள் எவை எனக் கண்டறியுங்கள்.

## தொழில்

இந்தக் கவிதையைக் கவனியுங்கள்

### படிப்பு முடிந்தால்

"கேள்வி:
படிப்பை முடித்தால், பள்ளிக்கூடம்
விட்டு வந்தால்
சொல்லிடு சொல்லிடு பின்னர் என்ன
வேலைக்குச் செல்வாய் நீ,

* * * * * *

விடை:
முதல்நபர்:
வயலுக்குச் செல்வேன் வயலுக்குச் செல்வேன்
வயலுக்குச் செல்வேன் நான்.
முன்னோர் செய்திட்ட
வயல் வேலையாம்
தொழிலுக்குப் போவேன் நான்.

* * * * * *

இரண்டாம்நபர்:
பணம் கோடி செலவிட்டு
வாணிபம் செய்திட
துணிந்திடுவேன் நான் – தொழில்
வேறு நல் தொழில் உண்டோ?

* * * * * *

மூன்றாம்நபர்:
நாட்டில் படிக்காமல் அலைகின்ற
குழந்தைகளைச் சேர்த்து
கற்றிட நல் பள்ளிக்கூடம்
தொடங்குவேன் நான்.

* * * * * *

நான்காம் நபர்:
படிப்பு முடிந்தால் இராணுவத்தில் சேர்வேன்
படைத்தலைவன் ஆகி பாரத நாட்டைப்
பாதுகாப்பேன் நான்.

* * * * * *

என்.வி. கிருஷ்ணவாரியர்

பள்ளிப் படிப்பிற்கு பின்னர் நாம் தேர்வு செய்கின்ற பல்வேறு தொழில்களைக் குறித்தே கவிஞர் இங்கு குறிப்பிடுகின்றார். என்னென்ன வேலைகளைக் குறித்து இந்தக் கவிதை வரிகள் விளக்குகின்றன?

- விவசாயம்
-
-
-

வருங்காலத்தில் நீங்கள் செய்ய விரும்பும் தொழில்கள் எவை?

உடல் ரீதியிலான வேலைகளை மட்டும்தான் மனிதர்கள் செய்கின்றனரா?

வருமானத்திற்காக ஒருவர் உடல் ரீதியாகவோ, அறிவுபூர்வமாகவோ செய்கின்ற வேலைக்குத் தொழில் என்று பெயர். தொழில் செய்வதற்கு சம்பளம் அன்றாடக் கூலியாகவோ மாதச் சம்பளமோ கிடைக்கிறது. தனி நபரின் முக்கிய வருமான வழிதான் தொழில்.

### கூலியும் சம்பளமும்

ஒப்பந்த அடிப்படையில் செய்யும் வேலைகளுக்கு தொழில் உரிமையாளர் தொழிலாளிக்கு வழங்கும் பிரதிபலனே கூலி. நேரம் அல்லது நாட்கள் அடிப்படையில் கூலி நிச்சயம் செய்து வழங்கப்படுகிறது. ஆனால் ஒருமாத கால அளவின் அடிப்படையில் ஊழியர்கள் செய்யும் வேலைக்கு தொழில் உரிமையாளர் கொடுக்கும் பிரதிபலன்தான் சம்பளம்..

உங்கள் வீட்டில் யார் யார் வருமானம் கிடைக்கக்கூடிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்?

உங்களுடைய குடும்ப அங்கத்தினர்களின் தொழில்களை அட்டவணைப்படுத்துக.

| குடும்ப அங்கத்தினர்கள் | தொழில் |
|---|---|
| • | |
| • | |
| • | |


## வருமான உறைவிடங்கள்

நம்மைச் சுற்றியுள்ளவர்கள் பல்வேறு தொழில்கள் மூலம் வருமானத்தை பெறுகிறார்கள். விவசாயம், வியாபாரம், வங்கிச் சேமிப்புகள், சொத்துகள் என்பவற்றின் வழியாகவும் வருமானம் கிடைக்கின்றது. வருமானம் வருகின்ற இதுபோன்ற உழைப்போ, நிலங்களோதான் வருமான உறைவிடங்கள்.

**சொத்துகள்**

பல்வேறு வகையான பொருளாதார வளங்களைத்தான் சொத்துகள் என்று கூறுகிறோம். கட்டிடங்கள், பொருட்கள் போன்றவை சொத்துக்களுக்கு உதாரணங்களாகும்.

பல்வேறு வருமான உறைவிடங்களை விளக்குகின்ற சொற்சூரியனை முழுமையாக்குங்கள்.



பல்வேறு உறைவிடங்களில் இருந்து கிடைக்கின்ற வருமானம் அட்டவணை படுத்தப்பட்டுள்ளதைப் பாருங்கள்

| வருமான உறைவிடங்கள் | வருமானம் |
|---|---|
| விவசாயம் | விளைச்சல் |
| தொழில் | கூலி/சம்பளம் |
| வியாபாரம் | இலாபம் |
| வங்கிச் சேமிப்பு | வட்டி |
| சொத்துகள் | வாடகை/ பாட்டத்தொகை |
| பங்குச்சந்தை சேமிப்பு | இலாப விகிதம் |



உங்கள் குடும்பத்தின் பல்வேறு வருமான வழிகளைக் குறித்து வகுப்பில் கலந்துரையாடல் நடத்துங்கள்.

## தனிநபர் வருமானமும் குடும்ப வருமானமும்

வருமான வழிகள் பலவகைப்பட்டதாக இருப்பதுபோல் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும் வேறுபட்டதாக இருக்கும். தனிநபர் ஒருவருக்கு பல்வேறு வழிகளின் வாயிலாக வருமானத்தை ஈட்ட இயலும். எடுத்துக்காட்டாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவருக்கு வங்கி சேமிப்பு வாயிலாகக் கிடைக்கும் வட்டியும் விவசாயம் தொடர்பான வியாபாரத்திலிருந்து கிடைக்கின்ற இலாபமும் அவரின் தனிநபர் வருமானம் ஆகும். இதைப் போன்று தொழில்கள் மூலமாகவோ வேறு வழியாகவோ வருமானம் கிடைக்கின்றது. ஒருவருக்கு பல்வேறு வருமான வழிகள் வாயிலாக ஒரு குறிப்பிட்ட கால அளவில் கிடைக்கின்ற வருமானத்தை தனிநபர் வருமானம் என்கிறோம். உங்கள் குடும்பத்தின் பல்வேறு வருமான வழிகளைக் குறித்து கலந்துரையாடலாமா? இவ்வாறு ஒரு குடும்பத்தில் அங்கத்தினர் அனைவருக்கும் சேர்த்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கிடைக்கும் மொத்தத்தொகை தான் குடும்ப வருமானம்.



உங்கள் சுற்றுப்புறத்தினை உற்றுநோக்கி வேறுபட்ட வருமான வழிகளையும் அவற்றின் வழியாக கிடைக்கும் வருமானத்தையும் பட்டியலிடுங்கள்.


## தொழில்கள் பலவிதம்

படங்களை உற்றுக் கவனியுங்கள்













மேலே தரப்பட்டுள்ள படங்களைக் கவனியுங்கள்.

படத்தில் என்னென்ன தொழில்கள் உள்ளன?

- ஆசிரியர் வேலை
- 
- 
- 
- 
- 

## விவசாயத் தொழில்

இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களும் நார்களும் உற்பத்தி செய்வதற்காக தாவரங்களை வளர்த்தல், கால்நடைகளை வளர்த்தல். மீன் வளர்த்தல் முதலானவை விவசாயத் தொழில்கள் ஆகும். விவசாயம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றது. இந்தியாவில் மொத்த தொழிலாளர்களில் 46.5% பேர் விவசாயத்திலும் அது தொடர்பான தொழில்களிலும் ஈடுபட்டு இருக்கிறார்கள் (எக்னாமிக் ரிவ்யூ: 2022-23)

## விவசாயம் சாராத தொழில்கள்

விவசாயத் தொழிலில் உட்படுத்தாத எல்லாவித தொழில்களையும் விவசாயம் சாராத தொழில்கள் எனக்கூறலாம். பொருட்கள் தயாரிப்பதும் பல்வேறு சேவைகளையும் விவசாயம் சாராத தொழில்களின் பட்டியலில் சேர்த்துள்ளனர். ஆடை உற்பத்தி, கட்டடம் கட்டுதல், வியாபாரம், வங்கிச்சேவை, ஆசிரியர் பணி, போக்குவரத்து, ஆலைத்தொழில் போன்றவை விவசாயம் சாராத தொழில்களுக்கு உதாரணங்களாகும்.

உங்கள் பள்ளியில் விவசாய மன்றத்தின் சார்பாக நடத்தப்படும் செயல்பாடுகள் எவையெல்லாம்? குறிப்பு தயாராக்குங்கள்.



உங்கள் சுற்றுப்புறங்களில் காணப்படும் தொழில்களை விவசாயத்தொழில்கள் என்றும் விவசாயம் சாராத தொழில்கள் எனவும் வகைப்படுத்தி கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை முழுமைபடுத்துங்கள்..

| விவசாயத் தொழில்கள் | விவசாயம் சாராத தொழில்கள் |
|---|---|
| • நெல் விவசாயம் | • வியாபாரம் |
| • மீன் வளர்த்தல் | • கட்டடம் கட்டுதல் |
| • | • |
| • | • |
| • | • |

## சுயதொழில்



சிபியின் பெற்றோர் "ஸ்டார் ஊறுகாய்" என்ற பெயரில் ஊறுகாய் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினை நடத்தி வருகிறார்கள். சொந்தமாக தொழில் இல்லாமல் இருந்த சூழலில் அரசு நிதியுதவியுடன் தொடங்கிய இந்தத் தொழில் நிறுவனம் இலாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது. சிபியின் குடும்ப வருமான வழி என்பதுடன் பத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த நிறுவனம் மூலம் தொழில் கிடைத்துள்ளது.

குறிப்பை வாசித்தீர்களல்லவா? இப்படிப்பட்ட தொழில் நிறுவனங்களை தனிநபர் தனியாகவும் பிறருடன் சேர்ந்தும் நடத்துவது உங்களுக்குத் தெரியுமா?

ஏதாவது ஒரு தொழில் நிறுவன உரிமையாளரின் கட்டுப்பாட்டில் இல்லாமல் சுதந்திரமாகச் செயல்பட்டு கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கை நடத்துவதை சுயதொழில் என்கிறோம். சுயதொழிலில் ஈடுபடுகின்றவர்கள் அந்நிறுவனத்தின் உரிமையாளராகவும் அதே நேரம் ஒரு தொழிலாளியாகவும் செயல்படுகிறார். சுயதொழில் செய்பவர்கள் பெரும்பாலும் தனியாகவே அவற்றை நிர்வாகம் செய்கின்றனர். அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் முழு உரிமையும் அவருக்குத் தான். உங்கள் பகுதியில் தனிநபராகவோ, கூட்டாகவோ சேர்ந்து நடத்துகின்ற மளிகைக்கடைகள், தையற்கடைகள், பலகாரக்கடைகள் முதலானவை உண்டல்லவா? சுயதொழில் நிறுவனங்களுக்கு இது எடுத்துக்காட்டாகும். மேலும் சில உதாரணங்களைக் கண்டறியுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள படங்களை உற்றுநோக்கி அவை எந்த தொழிலுடன் தொடர்புடையது என எழுதுங்கள்.



A) ............................................



B)............................................



C) ............................................



D)............................................

சுயதொழில் நிறுவனங்களின் சிறப்புத்தன்மைகளை எழுதுங்கள்.

- பிறரைச் சார்ந்திருக்காமல் சுயதொழில் நிறுவனம் வழி வருமானத்தைக் கண்டடைகிறார்கள்.
-
-

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சுயதொழில் நிறுவனங்கள் பெரும்பங்காற்றுகின்றது. அதனால் தான் நமது அரசாங்கம் சுயதொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்குப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

| சுயதொழில் திட்டங்கள் | பயனடைவோர் |
|---|---|
| • நவஜீவன் திட்டம் | • வயது முதிர்ந்தோர் |
| • கைவல்ய | • மாற்றுத்திறனாளிகள் |
| • சரண்யா | • பெண்கள் |
| • | • |

சுயதொழில் தொடங்கியதன் வழியாக வாழ்க்கையில் வெற்றிபெற்ற சிலருடைய அனுபவங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

### வீட்டுத் தாழ்வார சாய்ப்பில் தொடங்கிய பலகார உற்பத்தி

அனு மலப்புறம் மாவட்டத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தார். தனது சொந்த வீட்டில் வைத்து சுயதொழில் நிறுவனம் தொடங்கினார். வீட்டுத் தாழ்வார சாய்ப்பில் தேவையான வசதிகள் செய்து சாதாரண பலகாரங்களைத் தயாரித்து விற்பனை செய்தனர். மெல்ல மெல்ல வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இன்று சுமார் அறுபது வகையான பலகாரங்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றனர். ஒரு வருடம் 11 கோடி ரூபாய்க்கான விற்பனை நடைபெறுகிறது.

### மாதம் 50000 ரூபாய் சம்பாதிக்கும் குடும்பத்தலைவி

ஒரு பொழுதுபோக்காக இருந்த வர்ணம் பூசுதலை வியாபாரம் என்ற அளவிற்கு கொண்டு வந்து வெற்றி பெற்றவரே சஜிதா. இவரின் தொழில் துணியில் வண்ணம் பூசுதல் ஆகும். சேலைகள், சட்டைகள், சுடிதார், குழந்தைகளின் ஆடைகள் போன்றவற்றில் அழகாக ஒவியம் தீட்டினார். துணி ஓவியத்தை ஒரு பொழுதுபோக்கு என்பதிலிருந்து வியாபாரமாக்கி வெற்றியடைந்தார். மாதந்தோறும் 50000 ரூபாய் சம்பாதிக்கிறார்.

மேலே கொடுக்கப்பட்டுப்பட்டுள்ள மாதிரிகளைக் கவனித்தீர்கள் அல்லவா?

உழைப்பதற்கான மனமும் தன்னம்பிக்கையும் இருந்தால் பல்வேறுபட்ட தொழில்கள் செய்து வாழ்வில் வெற்றி அடையலாம். அனைத்துத் தொழில்களிலும் அததற்குரிய மேன்மைகள் உள்ளன. கல்விக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப விருப்பமுள்ளதைத் தேர்வு செய்வதற்கான உரிமை நமக்கு உண்டு. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## தொடர் செயல்பாடுகள்

1. சமூக அறிவியல் மன்றத்தின் செயல்பாட்டின் பாகமாக உங்களின் அருகிலுள்ள விவசாயிகளுடன் நேர்காணல் நடத்தி விவசாய தொழிலாளிகளின் சிறப்பியல்புகளைக் குறித்து ஒரு எளிய குறிப்பு தயாரியுங்கள்.
2. உங்கள் பகுதியில் காணப்படும் பல்வேறு தொழில்களைக் குறித்து ஆசிரியரின் உதவியுடன் காணொளி தயாரித்து வகுப்பில் வெளியிடுங்கள்.
3. உங்கள் பகுதியிலுள்ள தொழில் உரிமையாளருடன் நேர்காணல் நடத்துங்கள். நேர்காணலுக்கான வினாத்தொகுப்பு ஆசிரியரின் உதவியுடன் தயாரியுங்கள்.
4. உங்கள் அருகாமையிலுள்ள சுயதொழில் நிறுவனங்களுக்குச் சென்று அங்குள்ள செயல்பாடுகளை உற்றுநோக்கி குறிப்பு தயாராக்குங்கள்.
5. கேரளத்தில் தொழில்துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து விவரங்கள் சேகரித்து கருத்தரங்கு நடத்துங்கள்.
6. சுயதொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்களைக் குறித்து செயல்திட்டம் தயாராக்கி சமூக அறிவியல் மன்றத்தில் வெளியிடுங்கள்.

ST-535-7-SOC. SCI. (T)-5-VOL-1

# 4

# ஆடை கடந்து வந்தபாதை









படங்களை உற்றுப் பாருங்கள்

இந்த உயிரினங்கள் கடுமையான சூடு, குளிர் போன்ற சூழல்களில் எப்படி தங்களைப் பாதுகாத்துக்கொள்கின்றன.

ஆட்டின் உரோமமும் கிளிகளின் தூவல்களும் ஆமையின் மேலோடும் மாறுபட்ட தட்ப வெப்பச் சூழல்களில் ஓர் ஆடைபோல பாதுகாப்பு வழங்குகிறது. ஆனால் மனிதன் இவ்வாறான சூழல்களை எவ்வாறு எதிர்கொண்டான் என்று நீங்கள் சிந்தித்துள்ளீர்களா?

- மனிதன் தமக்குத் தேவையான ஆடைகளை இயற்கையிலுள்ள பொருட்களைக் கொண்டு உருவாக்கினான்.
- 
- 

இன்று மனிதன் என்னென்ன விதமான ஆடைகளைப் பயன்படுத்துகிறான்?

ஆடை நமக்கு எவ்வாறெல்லாம் பயன்படுகின்றது?

அதிகமான கருத்துகளை எழுதிச்சேர்த்து பட்டியலை முழுமையாக்குங்கள்.

- குளிரிலிருந்து பாதுகாப்பு.
- வெப்பத்திலிருந்து பாதுகாப்பு.
- உடல் வெப்ப நிலையை நிலை நிறுத்துகிறது.
- பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு.
-
-

நாம் பயன்படுத்தும் ஆடைகளுக்கு நீண்ட கால வரலாறு உண்டு. இன்று நாம் பயன்படுத்தும் பல்வேறு ஆடைகளின் வடிவமைப்புக்கு வந்தடைந்தது எப்படி என்று பார்க்கலாம்.

படங்களைக் கவனியுங்கள்





என்னென்ன பொருட்களை ஆதிகால மனிதன் ஆடைகளாகப் பயன்படுத்தினான்?

| |
|---|
| • மரத்தோல் (மரப்பட்டை) |
| • . |
| • |

வேட்டையாடி வாழ்ந்திருந்த காலத்தில் தனது சுற்றுப்புறங்களில் கிடைத்த பொருட்களை ஆடைகளாகப் பயன்படுத்தினர். புல், இலை, மரத்தோல் (மரப்பட்டை) விலங்குகளின் தோல் என்பவற்றை பயன்படுத்தி ஆடைகளை உருவாக்கினர். விலங்குகளின் கொம்புகள், எலும்புகள் ஆகியவற்றை ஊசியாகப் பயன்படுத்தி ஆடை தயாரிப்பதற்கு உதவும் கருவிகளாக்கினர். கூர்மையான கற்களை ஆயுதங்களாக்கி பயன்படுத்திய காலகட்டத்தில் ஆடைகளைத் தைப்பதற்கு கல்ஊசி உதவியது. விலங்குகளின் தோல், உரோமம் என்பவற்றை சுத்தப்படுத்தியும் பதப்படுத்தியும் அவர்கள் ஆடைகளாக்கியிருந்தனர்.


கல் ஊசி


ஆதிமனிதனின் ஆடை உற்பத்தி இன்றுபோல் இருக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன?

## நெசவு தொழில் நுட்ப அறிவு

சுற்றுப்புறங்களிலிருந்து சேகரித்த நார்களைத்தான் ஆதி காலங்களில் ஆடை உற்பத்திக்குப் பயன்படுத்தினர்.

நார்களை இணைத்து நீளமுள்ள நூல்களாக்கினர். இத்தகைய நூலைப் பயன்படுத்தி துணி தயாரிப்பதுதான் நெசவுத் தொழில்.

### சிந்து நதிக்கரை ஆடை

இந்தியாவின் வடமேற்கு பகுதியில் நிலைபெற்றிருந்த பழமையான நதிக்கரை நாகரீகமே சிந்துசமவெளி நாகரிகம். சிந்துசமவெளி மக்கள் பருத்தி, கம்பளி ஆடைகளை உருவாக்கினர், என்று நமக்கு கிடைத்த வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் தெரிந்து கொள்ளலாம். அங்கிருந்து கிடைத்த ஆடை அணிந்த சிலைகள் அங்குள்ள மக்கள் ஆடை அணியும் முறையை வெளிக்காட்டுகிறது. பருத்தி இங்கிருந்துதான் பிற நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது.

படிப்படியாக ஆடை நெய்யும் திறன் கூடுதல் மாற்றம் அடைந்தது. ஆரம்பகாலத்தில் பருத்தியிலிருந்தும் சணலிலிருந்தும், தயாரித்த நூலைப் பயன்படுத்தி கைகளால் மட்டும் ஆடை நெய்தனர். விலங்குகளின் தோலைக்காட்டிலும் மேம்பட்டது நூல் ஆடைகள் என்று புரிந்துகொண்டது, நெய்து எடுக்கப்பட்ட ஆடைகளின் பரவலுக்குக் காரணமானது. மரத்தறிகள் பயன்படுத்தி துணி தயாரிக்கும் முறை பின்னர் வளர்ச்சி பெற்றது.

மனிதர்களுக்கு ஆடைகளின் தேவை அதிகரித்தது நெசவுக் கருவிகளின் கண்டுபிடிப்புக்குக் காரணமானது. இது நெசவை விரைவுபடுத்த உதவியது. நூலைப் பயன்படுத்தி கைத்தறியில் நெய்த துணிகளே கைத்தறித் துணிகள்.



பழங்கால நூல்நூற்பு இயந்திரம்



கைத்தறி



கைத்தறியின் கண்டுபிடிப்பு ஆடை உற்பத்தி துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. நீலம் (Indigo) அவுரிச் செடியிலிருந்து உண்டாக்கிய சாயத்தினைப் பயன்படுத்தி ஆடைகளுக்கு நிறம் கொடுத்தனர். காலப்போக்கில் நெசவுத்தொழில் நுட்பம் அதிகரித்தது.





**பருத்தி** (Cotton)

உலகளவில் ஆடை உற்பத்தி செய்ய பயன்படுத்தும் பொருள் பருத்தி. பருத்தி செடியிலிருந்து கிடைக்கும் பஞ்சை நூலாக்கி ஆடை உற்பத்திக்குப் பயன்படுத்தினர். பண்டையகாலம் முதல் இந்தியாவில் பருத்தி பயிர் செய்யப்பட்டு வந்தது.


**சணல்** (Jute)

சணல் செடியிலிருந்து சணல் உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஓர் இயற்கை நார். உலகில் சணல் விவசாயத்தின் பெரும்பங்கு கங்கை நதிக்கரையிலாகும். வெளிநாட்டினர் துணி உற்பத்திக்காக இந்தியாவிலிருந்து ஏராளமாகச் சணலைக் கொண்டு சென்றிருந்தனர்.





**நீலம் (அவுரிச் செடி)** (Indigo)

முன்காலங்களில் ஆடைகளுக்கு நிறம் கொடுக்க அவுரிச் செடியிலிருந்து கிடைக்கும் சாயத்தைப் பயன்படுத்தினர். பின்னர் நீலத்தில் பல்வேறு கலவைகளைச் சேர்த்து பல்வேறு நிறங்களை உருவாக்கினர்.

நமது நாட்டிலும் ஏராளம் கைத்தறி நிறுவனங்கள் உள்ளன. கண்ணூர், திருவனந்தபுரம் மாவட்டத்தில் பாலராமபுரம், திருச்சூர் மாவட்டத்தில் கூத்தாம்புள்ளி, என்பவை முக்கியமான கைத்தறி மையங்களாகும்.



கைத்தறி ஆடைகள்


அறிவியல் வளர்ச்சி ஆடை உற்பத்தித் துறையில் புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்குக் காரணமானது. படத்தில் காண்கின்ற ஸ்பின்னிங் ஜென்னி அவற்றில் ஒன்று ஆகும்.



**ஸ்பின்னிங் ஜென்னி (Spinning Jenny)**

ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் தான் ஸ்பின்னிங் ஜென்னியைக் கண்டு பிடித்தார். கைகளால் நூல் நூற்பது அக்காலத்தில் ஆடை உற்பத்திக்குப் போதுமானதாக இல்லை. ஸ்பின்னிங் ஜென்னியின் கண்டுபிடிப்பு நூல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தது.

மக்கள் தொகைப் பெருக்கம் ஆடைகளின் தேவையை அதிகரிக்கச் செய்தது. புதிய இயந்திரங்கள் நெசவுத்தொழிலின் பாகமானது. அவை மனித ஆற்றலைக் குறைத்தது. கைத்தறியின் இடத்தை இயந்திரங்கள் பிடித்துக் கொண்டன.



**இயந்திரத்தறி (Power Loom)**

எட்மண்ட் ஹார்ட்ரைட் என்பவர் இயந்திரத் தறியைக் கண்டுபிடித்தார். மின்சாரம் அல்லது பிற ஆற்றலைப் பயன்படுத்தி இயந்திரத்தறியை இயக்கினர். கைத்தறியைவிட மிகவேகத்தில் அதிகமான துணி உற்பத்தி செய்ய இந்த இயந்திரங்களுக்கு இயலும்.



இயந்திரமயமான ஆடை உற்பத்தி

இயந்திரமயமாதலின் பலனாக உற்பத்தி செய்த அதிக ஆடைகளை விற்பனை செய்ய சந்தைகளைத்தேடி ஐரோப்பியர் உலகின் பல இடங்களுக்கும் பயணித்தனர். அத்தகைய யாத்திரையில் இந்தியாவிற்கும் வந்தனர். ஆடை உற்பத்திக்கு தேவையான கச்சா பொருட்களை இந்தியாவிலிருந்து அவர்கள் ஐரோப்பாவிற்கு கொண்டு சென்றனர். இயந்திரங்களின் உதவியுடன் ஆடை தயாரித்து இந்தியாவிற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர்.

### ஐரோப்பியர்

உலகின் ஏழு பெருங்கண்டங்களில் ஒன்றுதான் ஐரோப்பா. இந்தக் கண்டத்தில் வசிப்பவர்கள்தான் ஐரோப்பியர்கள் என அழைக்கப்படுகின்றனர். ஐரோப்பியாவிலிருந்து வியாபாரத்திற்காக வந்தவர்கள்தான் போர்த்துகீசியர் (போர்ச்சுக்கல்) டச்சுக்காரர்கள் (நெதர்லாந்து) ஆங்கிலேயர்கள் (இங்கிலாந்து) பிரெஞ்சுக்காரர்கள் (பிரான்ஸ்) ஆகியோர் இந்தியாவை காலனி ஆதிக்கத்தில் ஆக்கி இங்கு கிடைக்கும் கச்சாப்பொருட்களை அவர்கள் தங்களது நாடுகளுக்குக்கொண்டு சென்றனர். இவர்களில் ஆங்கிலேயர்கள்தான் இந்தியாவை அதிக காலம் காலனி ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர்.

சமூகத்தில் வந்த மாற்றங்களும் ஆடை உற்பத்தியைப் பெரிதும் பாதித்தது. ஆடைகளின் தேவையால் ஏற்பட்ட மாற்றம் நவீனமான நெய்த்து இயந்திரங்களின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. இயந்திரங்களின் உதவியுடன் உற்பத்தி அதிகரித்தது. சிறப்பானதும் புதுப்புது வடிவங்களிலும் தயாரித்த ஆடைகள் மக்களைச் சென்றடைந்தது. ஆடைகளுக்கு நிறம் கொடுக்க செயற்கை சாயத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர்.



வேறுபட்ட ஆடைகளும் துணிகளும்

நாம் இன்று பயன்படுத்தும் எல்லா ஆடைகளிலும் காணப்படுகின்ற பல்வேறு நிறங்கள் இதுபோன்ற செயற்கை சாயங்களால் தயாராக்கப்பட்டவையே.

இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆடை உற்பத்தி தொடங்கியவுடன் அத்துறையில் ஏற்பட்ட நல்ல மாற்றங்களைக் கவனியுங்கள்.

**இயந்திரங்களின் பயன்பாடு ஆடை உற்பத்தியில் ஏற்படுத்திய மாற்றங்கள்**

- ஆடை உற்பத்தியின் பெருக்கம்
- மனித வேலைப்பளுவில் குறைவு
- ஆடைகளின் வேறுபாடு
- தரமான ஆடைகள்
- ஆடைகளின் பரவல்
- 



இயந்திரங்களின் பயன்பாடு ஆடை உற்பத்தியில் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறித்து கலந்துரையாடுங்கள்.

ஆடை உற்பத்திக்கு இயற்கை நூல்களையும் செயற்கை நூல்களையும் பயன்படுத்தினர். விலங்குகளிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் இயற்கை நூல்களை உற்பத்தி செய்கின்றனர். செயற்கை நூல் கண்டுபிடிக்கப்பட்டதின் வாயிலாக வேறுபாடு கொண்டதும், தரம்மிக்கதுமான துணிகளை உற்பத்தி செய்ய வழிவகுத்தது. பாலிஸ்டர், நைலான் முதலான செயற்கை நூல்களின் பயன்பாடு அதிக காலம் உழைப்பதுடன் செலவு குறைந்த ஆடை உற்பத்திக்கு உதவியது.

**ஆடை உற்பத்திக்குப் பயன்படுத்தும் நூல்கள்**

**இயற்கை நூல்கள்**

**விலங்குகளிலிருந்து கிடைப்பது**

*எ.கா*

செம்மறி ஆட்டு உரோமத்திலிருந்து கம்பளி நூலும் பட்டுப் புழுவிலிருந்து பட்டு நூலும் தயாரிக்கப்படுகின்றது.

**தாவரங்களில் இருந்து கிடைப்பது**

*எ.கா*

பருத்தி, சணல் செடிகளிலிருந்து முறையே பருத்தி நூலும், சணல் நூலும் தயாரிக்கப்படுகின்றன.

**செயற்கை நூல்கள்**

பெட்ரோலியம் போன்ற இரசாயனப் பொருட்களிலிருந்து செயற்கை நூல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பொதுவாக இயற்கை நூல்களைவிட செயற்கை நூல்களைப் பயன்படுத்தி ஆடை உற்பத்தி செய்ய செலவு குறைவாகும். விரைவாக சுருங்குவதில்லை என்ற நன்மையும் இதற்கு உண்டு.

*எ.கா*

பாலிஸ்டர், நைலான், ரேயான் போன்றவை.

இயற்கை நூல்கள் எந்தெந்த உயிரினங்களிலிருந்தும் செடிகளிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது எனக் கண்டறிந்து பட்டியலை முழுமையாக்குங்கள்.

| | |
|---|---|
| கம்பளி நூல் | .................................... |
| பட்டுநூல் | பட்டுப்புழு |
| பருத்தி நூல் | பருத்திச்செடி |
| சணல் நூல் | .................................... |


உங்கள் பகுதியிலுள்ள தையற்கடைக்குச் சென்று வீணாகும் துண்டுத்துணிகளைச் சேகரித்து இயற்கை நூல் துணிகளையும் செயற்கை நூல் துணிகளையும் பிரித்தெடுத்து சார்ட் அட்டையில் ஒட்டி வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.


## ஆடைகளில் வேறுபாடு

பல்வேறு காலநிலைகளுக்கு ஏற்ற ஆடைகளைத்தான் நாம் அணிகிறோம். காலநிலை மாற்றத்திற்கு தகுந்தவாறு மட்டுமா நாம் வேறுபட்ட ஆடைகளை அணிகிறோம்?

கீழே தரப்பட்டுள்ள படங்களைக் கவனித்து இவ் ஆடைகளை நாம் எந்தெந்த சூழல்களில் அணிகிறோம் எனக் கண்டறிந்து பட்டியலில் படத்தின் எண்களை எழுதவும்.


1


2


3


4


5


6

| காலநிலை | நோய் எதிர்ப்பு | அதிகாரம் (பதவி) | தொழில் |
|---|---|---|---|
| 1 | | | |



பல்வேறு சூழ்நிலைகளில் அணியும் ஆடைகளைக் குறிக்கும் படங்களைச் சேகரித்து படத்தொகுப்பு தயாரியுங்கள்

காலநிலை, சடங்குகள், அதிகார பொறுப்புகள், தொழில், வட்டாரச் சூழல் இவையெல்லாம் ஆடை அணியும் பழக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆடை மட்டுமல்ல அணியும் அணிகலன்கள் தொப்பிகள், காலணிகள் என்பவற்றிலெல்லாம் இந்த வேறுபாட்டைக் காண இயலும்.

இன்று ஆடைகளிலும் ஆடை அணியும் முறையிலும் வேறுபாடுகளும் ஒற்றுமைகளும் நம்மிடம் காணப்படுகிறது. காலநிலை, பயணம் செய்வதற்கு ஏற்புடைய ஆடைகள் போன்றவற்றை தேர்ந்தெடுப்பவர்கள்தான் நாம் அனைவரும்.

ஆடைகளில் வேறுபாடு அதிகமாகக் காணப்படுவது கலைத்துறையிலாகும். வண்ணமயமான ஆடைகளை உள்ளடக்கிய கலை வடிவங்களைக் காண நாம் விரும்புகிறோம் அல்லவா?




பல்வேறு கலைவடிவங்கள்

தரப்பட்டிருக்கும் படங்களில் உள்ள ஆடையலங்காரத்தை உற்றுக்கவனித்து அது எந்த கலை வடிவத்துடன் தொடர்புடையது என்று கண்டறிந்து பட்டியலிடுங்கள்

- 
- 
- 
- 
- 
- 

வெவ்வேறான கலைவடிவங்களின் ஆடை வேறுபாடுகளைக் குறித்து கலந்துரையாடுங்கள்

## ஆடை அணிவதில் பாகுபாடு



ശ്രീഉത്രംതിരുനാൾ മഹാരാജാവു തിരുമനസ്സുകൊണ്ടു.

നമ്പർ-178. M. E. 1034. A. D. 1859.

ശ്രീപത്മനാഭദാസ വഞ്ചിബാല മാർത്താണ്ഡ
വർമ്മ കുലശെഖരകിരീടപതി മന്നെ
സുൽത്താൻ മഹാരാജരാജെ ശ്രാഗ്യൊ
ദയ രാമരാജാബഹാദർ ഷംഷെർ
ജംഗ മഹാരാജാ അവർകൾ
സകലമാനപെർക്കും പ്രസിദ്ധ
പ്പെടുത്തുന്ന വിളംബരം.

ചാന്നാട്ടികളിടെ മെലിൽശീല സംഗതിയെക്കുറിച്ചു ൧൦൩൪-മാണ്ടു മകരമാസം ൨൬-നു ചെയ്തിട്ടുള്ള വിളംബരത്തിലെ നിബന്ധനകളെക്കൊണ്ടു സങ്കടം ഉള്ളതായി നാം അറിവാൻ ഇടവന്നിരിക്കകൊണ്ടും എല്ലാ ആളുകൾക്കും സങ്കടംകൂടാതെ ആകുന്നെടത്തൊളവും നടത്തിക്കണമെന്നു നമുക്കു വളരെ മനസായിരിക്കകൊണ്ടും ഇതിനാൽ പ്രസിദ്ധപ്പെടുത്തുന്നത എന്തെന്നാൽ —

ക്രിസ്തുമതത്തിൽ ചെന്നിരിക്കുന്ന ചാന്നാട്ടികളെപൊലെ ശെഷം ചാന്നാട്ടികളും കുപ്പായം ഇട്ടുകൊള്ളുകയൊ മുക്കുവത്തികളെപൊലെ എല്ലാ മതത്തിൽ ഉള്ള ചാന്നാട്ടികളും കട്ടിശ്ശീലകൊണ്ടു ഉടുത്തുകെട്ടിക്കൊള്ളുകയൊ മെൽജാതിയിൽ ഉള്ള സ്ത്രീകളെപൊലെ അല്ലാതെ മററു എതുവിധത്തിൽ എങ്കിലും മാറു മറച്ചുകൊള്ളുകയൊ ചെയ്യുന്നതിനു വിരൊധം ഇല്ലായ്കകൊണ്ടു ഈ വിവരം സകലമാനപെരും അറിഞ്ഞു നടന്നുകൊള്ളുകയും വെണം.

എന്നു ൧൦൩൪-മാണ്ടു കർക്കടകമാസം ൧൪-നു.

தென்கேரளத்தில் தாழ்ந்த சாதிக்காரர் என்று அழைக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த பெண்களுக்கு தோள் சீலை அணிவதற்கான உரிமையை வழங்கிகொண்டு 1859 இல் அன்றைய திருவிதாங்கூர் மன்னரான உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்மா வெளியிட்டுள்ள விளம்பரம் இது.

இந்த விளம்பரத்திலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள்?

அன்றைக்கு நடைமுறையில் இருந்த சாதிப் பாகுபாடு, சில பிரிவு மக்களுக்கு விருப்பமுள்ள ஆடை அணிவதிலிருந்து தடை செய்யபட்டிருந்ததை இந்த விளம்பரத்தின் வழியாக அறிய முடிகிறது.

### திருவிதாங்கூர்

தென்கேரளத்தின் பல பகுதிகளும் மத்திய கேரளாவில் சிறிய ஒரு பகுதியும் தமிழ்நாட்டின் பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டமும் சேர்ந்த மன்னராட்சி பகுதிதான் திருவிதாங்கூர். பதினெட்டாம் நூற்றாண்டின் பாதியில் அனிழம் திருநாள் மார்த்தாண்ட வர்மாவுடைய காலத்தில்தான் திருவிதாங்கூர் இராஜ்ஜியம் விரிவடைந்தது. 1956 இல் கேரள மாநிலம் உருவானதுடன் இந்தப் பகுதிகேரள மாநிலத்திற்கு சொந்தமாயிற்று.

### மேலாடைப் போராட்டம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென் திருவிதாங்கூரில் பெண்கள் மார்பை மறைப்பதற்காக நடத்திய போராட்டம் தான் மேலாடைப் போராட்டம். அந்நாட்களில் மேல் சாதி பெண்கள் மட்டுமே மேலாடை அணிவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். தாழ்ந்த சாதிப்பெண்களுக்கு மேலாடை அணியவும் மார்பை மறைக்கவும் அனுமதியில்லை. இதற்கு எதிராக 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேலாடை அணிவதற்கான உரிமையைப் பெற நடத்தப்பட்ட போராட்டமே மேலாடைப் போராட்டம்.

ஆடை அணிவதில் நிலைநின்றிருந்த உரிமைகள் மறுக்கப்பட்டது. குறித்து வகுப்பில் கலந்துரையாடி குறிப்பு தயாராக்குங்கள்

## ஆடை ஒரு போர் ஆயுதம்

பலவித சுரண்டல்களுக்கு எதிராக ஒரு போராட்ட ஆயுதமாக ஆடை கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டது. இதில் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தி அவர்களின் தலைமையில் நடந்த போராட்டங்கள்.

கதர் ஆடை, இராட்டை நூல்நூற்பு, அன்னிய ஆடை எதிர்ப்பு போன்றவை காந்திஜியின் சுதந்திரப் போராட்டத்தில் இடம் பெற்றன. இராட்டையில் நூல் நூற்று உற்பத்தி செய்கின்ற கதர் ஆடைகளை காந்திஜி அணியச் செய்தார். கதர் ஆடைகளை மக்கள் அணிய உற்சாகப்படுத்தினார். இவ்விதம் உள்நாட்டு ஆடை தயாரிப்பை ஊக்குவித்தார். உள்நாட்டு ஆடைகளை உற்பத்தி செய்து பயன்படுத்தி வெளிநாட்டு ஆடைகளைப் புறக்கணிக்கச் செய்தார்.



இந்திய மக்கள் அந்நிய ஆடைகளை புறக்கணித்து அழித்தனர்



இராட்டையில் நூல் நூற்கும் காந்திஜி

ஆடையையும் ஆடை அணிவதையும் போராட்ட முறையாக்கி அவர் சுதந்திரப் போராட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு நினைவுச்சின்னமாக இராட்டை மாறியது. கதர் ஆடை அணிவதும் கதர் தொப்பி வைப்பதும் தேச பக்தியின் அடையாளமாக மாறியது.

### சுதேசி இயக்கம்

இந்திய சுதந்திரப்போராட்டத்தின் ஒரு பகுதியாக 1905 ஆகஸ்ட் 7 ஆம் நாள் சுதேசி இயக்கம் ஆரம்பமானது. ஆங்கிலேயர் தயாரித்த பொருட்களைக் புறக்கணிக்கவும் இந்தியாவில் உற்பத்தி செய்த பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கம். சுதேசி இயக்கம் தொடங்கிய ஆகஸ்ட் 7 ஆம் நாளைத் தேசிய கைத்தறி நாளாக 2015 முதல் இந்தியாவில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

### கதர் இயக்கம்

1918 இல் காந்திஜியின் தலைமையில் கதர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் கதருக்கு முக்கிய பங்கு உள்ளது. கதர் இயக்கம் பலமடைந்ததின் வழியாக இந்தியக் கிராமங்களில் கதர் இராட்டையின் சத்தம் உயர்ந்தது. கதர் ஆடையின் விளம்பரம் இந்தியாவில் எங்கும் பரவியது.

இராட்டையும் கதர் ஆடையும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்ட ஆயுதமாக மாறியது எவ்வாறு? சுவரொட்டி தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

## ஆடை அணிவதில் புதிய மாற்றங்கள்

நீங்கள் தினமும் ஒரேவிதமான ஆடை அணிவதில் விருப்பம் உள்ளவரா?

ஆடை அணிவதில் உங்களுக்கு என்னென்ன விருப்பங்கள் உள்ளன?

படங்களைப் பாருங்கள்



ஆடை உற்பத்தி முறையில் மட்டுமல்ல வடிவமைப்பதிலும், பாணியிலும், பயன்படுத்துவதிலும் தினந்தோறும் மாற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றது. தனிநபர் ஆசை, விருப்பம், வசதி இவை இன்றைய ஆடை அணியும்முறையில் பெரும் தாக்கம் செலுத்துகிறது.


அழகுணர்வின் கற்பனைகளுக்கேற்ப உடை அலங்காரத்தில் அற்புதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. விளம்பரங்கள், சினிமாக்கள், சமூக வலைத்தளங்கள் முதலானவை ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

விளம்பரங்கள், சினிமாக்கள், சமூக ஊடகங்கள் முதலானவை ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துவது எவ்வாறெல்லாம் எனக் கலந்துரையாடுங்கள்.

இன்று ஆடை வடிவமைப்பு, அலங்கார தையல் (Embroidary) போன்ற மண்டலங்களில் ஏராளம் தொழில் வாய்ப்புகள் நிறைந்துள்ளன. ஆடை வடிவமைப்பு இன்று மிகப்பெரிய தொழில் வாய்ப்புள்ள ஒரு ஆய்வு மண்டலமாக வளர்ந்துள்ளது.




அலங்காரம் செய்த ஆடை




ஆடை வடிவமைப்பு

ஆடை உற்பத்தியில் என்னென்ன தொழில் பிரிவுகள் உள்ளன என்பதைப் பார்க்கலாம்.




உபயோகித்ததும் பயனற்றதுமான ஆடைகளை எப்படி பயனுள்ள பொருட்களாக மாற்றலாம்?




மேலே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புச் செய்திகளை கவனியுங்கள்

நீங்கள் வாங்கிய எல்லா ஆடைகளையும் பயன்படுத்துகிறீர்களா?

உபயோகித்த பொருட்களைப் பயன்படுத்தி கலைப்பொருட்கள் உருவாக்க முயற்சித்திருக்கிறீர்களா?

உலகெங்கும் ஏராளமான ஆடைகள் வீசி எறியப்படுகின்றன. இது நமது சுற்றுச்சூழலை மிகவும் பாதிக்கின்றது. பயன்படுத்தாத வீசி எறியும் ஆடைகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே இருக்கிறது. இந்த ஆடைகளை எவ்வாறு மீண்டும் பயன்படுத்தலாம்?

படங்களைக் கவனிக்கவும்



நமக்கு இப்படிப்பட்ட கைவினைக் கலைப்பொருட்களைத் தயாரிக்க இயலுமா?

ஆடை அலங்காரத்தின் வரலாற்றை அலசி ஆராய்ந்தால் ஆதிகாலத்தில் உடல் பாதுகாப்புக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படிருப்பதைப் பார்க்க முடியும். தொடர்ந்து இயற்கையமைப்பும், காலநிலையும் ஆடை உற்பத்திக்கும் ஆடை அலங்காரத்திற்கும் முக்கியத்துவம் அளித்தன. மாறிவரும் அழகுணர்வு, கற்பனைத்திறன், கலாச்சாரம், தற்கால நாகரீகம் என்பன தற்கால ஆடை அணியும் முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

விருப்பமுள்ள ஆடைகளை அணியும் போது நமக்குத் தன்மானமும் தன்னம்பிக்கையும் வளர்கிறது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான ஆடை அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அதற்குரிய செயல்பாடுகளில் நாமும் பங்கு பெறுவோம்.


## தொடர் செயல்பாடுகள்

1. உங்கள் பகுதியில் அமைந்திருக்கும் ஏதேனும் ஒரு கைத்தறி நிறுவனத்திற்குச் சென்று ஆடை உற்பத்தி செய்யும் முறையைக் குறித்த தகவல்களைச் சேகரிக்கவும்.
2. 'இந்திய மாநிலங்களில் வேறுபட்ட ஆடைகள்' என்ற தலைப்பின் அடிப்படையில் பல்வேறு மாநிலங்களில் உள்ள பலவகை ஆடைகளின் படங்களைச் சேகரித்து ஆல்பம் தயார் செய்யவும்.
3. பலவகையான ஆடைகள் எளிதாக கிடைக்கின்ற காலத்தில் தான் நாம் வாழ்கின்றோம். ஆனால் முற்காலத்தில் ஆடைகள் கிடைப்பது அரிதாக இருந்தது. ஆடைகளிலும் அணியும் முறைகளிலும் வந்த மாற்றங்களைக் குறித்து வீட்டில் பெரியோர்களிடம் விசாரித்து குறிப்பு தயார் செய்யவும்.
4. பல்வேறு கலைகளின் படங்களைச் சேகரித்து கலைகளில் பலவித ஆடைகள் என்ற ஆல்பம் தயாரிக்கவும்.
5. உங்கள் வீட்டிலுள்ள பழைய துணிகளைச் சேகரித்து கைவினைப் பொருட்கள் செய்து சமூக அறிவியல் மன்றத்தில் காட்சிப்படுத்தவும்.
6. பள்ளிக்கூடத்தில் ஆடை சேகரிப்பு மையம் தொடங்கி பழமையானதும். சுத்தமானதுமான ஆடைகளைச் சேகரிக்கவும். உங்கள் பள்ளிகூடத்தின் அருகில் அமைந்திருக்கும் முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்கள், பேரிடர் பாதுகாப்பு மையங்கள் போன்ற இடங்களுக்கு ஆசிரியரின் உதவியுடன் கொண்டு சென்று வழங்குவீர்கள் அல்லவா?

# 5

# வரைவோம் வாசிப்போம்

திருச்சூர் மாவட்டத்தில் வைத்து நடைபெறும் கேரளப் பள்ளிக்கூடக் கலை விழாவில் பங்கேற்க அஜியும் குடும்பத்தினரும் வந்திருந்தனர். அவர்கள் வைத்திருக்கும் தள அமைப்பு (Layout) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



அஜியும் அவரது குடும்பத்தினரும் இப்பொழுது இரயில் நிலையத்திலிருந்து பயணம் செய்து சுவராஜ் சந்திப்பிற்கு அருகிலுள்ள விழாக்குழு அலுவலகத்திற்கு அருகே நிற்கிறார்கள். அஜியின் நிகழ்ச்சி திருச்சூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைபெறுகிறது.

- விழாக் குழு அலுவலகத்திலிருந்து எந்த திசையில் பயணித்தால் அஜியின் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை எளிதில் அடையமுடியும்
- தள அமைப்பைச் சரிபார்த்து உணவகம் எங்குள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முடிகிறதா?
- திருச்சூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் இருந்து உணவகத்திற்கு எந்தத் திசையில் செல்ல வேண்டும்.

கலைவிழா நடைபெறும் இடத்தின் தள அமைப்பை அறிந்து கொண்டோமல்லவா?

சில நிறுவனங்களின் முன்பகுதியில் கட்டடங்களின் இருப்பிடத்தைக் காட்டும் தள அமைப்புகளைக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதைப் பார்த்திருக்கிறீர்களா? திசையைப் புரிந்துக்கொள்வதற்காக மட்டுமா இத்தகைய தள அமைப்புகளைத் தயாராக்குகிறோம்?

புதிய வீடு அல்லது கட்டடம் கட்டும் போது கோட்டுப்படம் மற்றும் திட்டப்படம் தயார் செய்வதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? கட்டடங்களின் திட்டப்படம் தயாராக்கும் பொழுது அதில் சரியான அளவுகள் உட்படுத்தப்படுகிறது. ஆனால் கோட்டுப்படம் தயாராக்கும் பொழுது அளவுகள் சரியாக அடையாளப் படுத்த வேண்டும் என்பதில்லை.


உங்களது வகுப்பறையின் ஒரு கோட்டுப்படத்தைத் தயாரிப்போமா?

வகுப்பறையின் வாசல் எந்த திசையில் உள்ளது?
சன்னல்கள் எந்தப் பகுதியில் உள்ளன?
கரும்பலகை/வெண் பலகை போன்றவை எந்தத் திசையில் வைக்கப்பட்டுள்ளது?

நீங்கள் ஒவ்வொருவரும் தயாரித்த கோட்டுப்படத்தைப் பரிசோதிக்கவும். அனைத்தும் ஒரே போல் உள்ளதா? திசையை முடிவு செய்ய கடினமாக இருந்ததா?

ஓர் இடத்தின் திசையை எவ்வாறு அறியலாம்?

சூரியன் உதிக்கும் திசையை நாம் கிழக்குத்திசை எனக் கணக்கிடுகிறோம்.



படம் A

அஜி வீட்டின் அருகில் சூரியனுக்கு நேராக நிற்கிறான்.

- அஜி எந்த திசையைப் பார்த்து நிற்கிறான்?

  ..............................................................

- அஜியின் வலது கை எந்தத் திசையில் நீட்டப்பட்டுள்ளது? இடதுகையோ?

  ..............................................................

  ..............................................................

- அஜியின் நிழல் எந்தத்திசையைக் குறிக்கிறது.

  ..............................................................



படம் B

- படம் B யில் அஜி எந்தத் திசையைப் பார்த்து நிற்கிறான்?

  ..............................................

- அஜியின் வலதுகை எந்தத்திசையில் நீட்டப்பட்டுள்ளது? இடது கையோ?

  ..............................................

- அஜியின் நிழல் எந்தத் திசையைக் குறிக்கிறது?

  ..............................................

- அஜி பார்த்து நிற்கும் திசையின் எதிர்த்திசை எது?

  ..............................................

சூரியனை அடிப்படையாகக் கொண்டு திசையை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பதை அறிந்து கொண்டீர்களல்லவா? திசையைக் கண்டறிய பொதுவாகத் திசைகாட்டும் கருவி பயன்படுத்தப்படுகிறது. திசையைக் கண்டறிய கைப்பேசிகளின் செயலிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

### திசைகாட்டும் கருவி


திசையைக் கண்டறிய பயன்படுத்தும் கருவியே திசைகாட்டும் கருவி. சுதந்திரமாக இயங்கும் காந்த முள் தெற்கு வடக்கு திசையில் நிலைகொள்வதே இந்தக் கருவிகளின் அடிப்படை. முள்ளில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள முனை வடக்கு திசையைக் குறிக்கிறது. கடல் பயணத்தில் திசையை அறிய பழங்காலத்தில் இருந்து இந்தக் கருவி மாலுமிகளால் பயன்படுத்தப்பட்டது.



இனி நாம் வகுப்பறையின் கோட்டு படத்தைத் திசையின் அடிப்படையில் தயாரிக்கலாமா?

திசையின் அடிப்படையில் காகிதத்தில் அல்லது புத்தகத்தில் வரையும் போது நினைவில் கொள்ள வேண்டியவை எவை?

கவனியுங்கள். சுவரில் தொங்கவிடப்பட்ட இந்த நிலப்படத்தின் திசைகளை எவ்வாறு கண்டறியலாம்?





### நிலப்படத்தில் உள்ள திசைகள்

நிலப்படத்தில் பொதுவாக திசையைக் காட்டும் அடையாளம் காணப்படும். சுவரிலுள்ள நிலப்படத்தில் மேல் பகுதியில் வடக்குத் திசையைக் குறிக்கும் அடையாளம் உள்ளது. நிலப்படத்தின் கீழ்ப் பகுதி தெற்கு திசையினையும் வலது பக்கம் மேற்கு திசையினையும் இடது பக்கம் கிழக்குத் திசையையும் சுட்டுகின்றன.

உங்களுடைய வகுப்பறையின் வடக்குத் திசை எந்தப் பகுதி என கண்டுபிடிக்கவும்? இதன் பிறகு வகுப்பறையின் கோட்டுப்படம் வரைகின்ற காகிதத்தின் மேலே வலது பக்கத்தில் நிலப்படத்தில் காண்பது போன்று திசையைக் காட்டும் ஏதாவது ஒரு குறியீட்டை வரையவும்.

பொதுவாக நிலப்படங்களில் திசையை அடையாளப்படுத்த பயன்படுத்தும் குறியீடுகள்





உங்களுடைய வகுப்பறையின் வாசல் எந்தத் திசையிலுள்ளது கண்டுபிடிப்போமா? சன்னல்கள் எந்தெந்த திசையில் உள்ளன. மேசை எந்தத் திசையில் உள்ளது. இனி நாம் வகுப்பறையின் கோட்டுப்படம் வரைவோம்.

கோட்டுப்படத்தை வரைந்து விட்டீர்களல்லவா? வாசல், மேசை, சன்னல்கள் போன்றவற்றிற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்று ஒரு குறிப்பு தயாரித்து கோட்டுப்படத்தில் சேர்க்கவும்.

| | |
|---|---|
| D. | வாசல் |
| T. | மேசை |
| W. | சன்னல்கள் |
| B.B | கரும்பலகை |
| WB. | வெண்பலகை |
| B. | இருக்கை |


அஜி தயாரித்த வகுப்பறையின் கோட்டுப்படம் கொடுக்கப்பட்டுள்ளது உற்று நோக்கவும்.

இனி நீங்கள் வரைந்த படங்களைச் சரிபார்க்கவும் அனைத்தும் ஒரே முறையில் உள்ளதல்லவா?




அஜியின் வகுப்பறை கோட்டுப்படம்

அஜியின் பள்ளியின் கோட்டுப்படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது அதனை உற்று நோக்கி கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை முழுமைப்படுத்தவும்




| | |
|---|---|
| கூடைப்பந்து மைதானத்தின் எந்தத் திசையில் அலுவலகக் கட்டடம் அமைந்துள்ளது. | • |
| கூடைப்பந்து மைதானத்தின் எந்தத் திசையில் பள்ளியின் நுழைவுவாயில் அமைந்துள்ளது. | • |
| கழிப்பறை வளாகத்தின் எந்தத் திசையில் நூலகமும் வாசிப்பு அறையும் இடம்பெற்றுள்ளது? | • |
| கூட்டுறவு அங்காடி அமைந்துள்ள கட்டிடத்தின் எந்தத் திசையில் சமையல் அறை அமைந்துள்ளது? | • |
| அரங்கத்தில் இருந்து எந்தத் திசையில் நடந்தால் நுழைவுவாயில் வழியாக வெளியே செல்ல முடியும். | • |

உங்களுடைய வகுப்பறையிலுள்ள இருக்கை, மேசை, கரும்பலகை என்பவற்றின் இடத்தைக் கோட்டுப்படத்தில் அடையாளப்படுத்தினீர்களல்லவா? எனில் வகுப்பறையில் நீங்கள் இருக்கும் இடத்தை எங்குள்ளது என எவ்வாறு கூறுவீர்கள்?

- முதல் இருக்கையில் இரண்டாவது
- கடைசி இருக்கையில் முதலில்
- ..........................................................................
- ..........................................................................

அப்படியெனில் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய இடத்தைக் கூறுங்கள்

பூமியில் ஓர் இடத்தின் அமைவிடத்தை எவ்வாறு கண்டறியலாம்?

கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்தின் படத்தைக் கவனிக்கவும்.




பந்தில் ஒரு வீட்டின் படம் ஒட்டப்பட்டுள்ளதைப் பார்த்தீர்களல்லவா? வீட்டின் அமைவிடம் எங்குள்ளது என்று எப்படிச் சொல்ல முடியும்?


மேலே, கீழே, நடுப்பகுதி, ஓரம் இவற்றில் எது சரி?

கோள வடிவ மேற்பரப்பில் ஒரு பொருளின் சரியான நிலையைத் தீர்மானிப்பது கடினம். பந்தில் ஒட்டப்பட்டுள்ள வீட்டின் சரியான அமைவிடத்தை எவ்வாறு கண்டுபிடிக்கலாம்?

படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது போன்று பந்தில் நேராகவும் குறுக்காகவும் கோடுகள் வரைந்தால்?




குறுக்கே உள்ள கோடுகள் நேரான கோடுகள்




ஒவ்வொரு கோட்டிற்கும் ஒரு எண் அல்லது எழுத்து வழங்கினால், வீடு எந்தெந்த கோட்டிற்கு இடையே அமைந்துள்ளது என்பதைச் சரியாகக் கண்டுபிடிக்க இயலும் அல்லவா?



இந்த பந்தில் கொடுக்கப்பட்டுள்ள வீட்டின் அமைவிடம் எங்குள்ளது என்பதைக் கண்டறிந்து எழுதவும்.




புவி உருண்டையை உற்று நோக்கவும்




கொடுக்கப்பட்டுள்ள புவி உருண்டையில் சிவப்பு நிறத்தில் வரையப்பட்ட கோட்டைக் கவனியுங்கள். இது பூமத்திய ரேகை எனப்படும். இந்தக் கோடு புவி உருண்டையை இரண்டு அரைகோளங்களாகப் பிரிக்கிறது. படத்தில் A என்று அடையாளப்படுத்தப் பட்டுள்ளதை வட அரைகோளம் என்றும் B என்று அடையாளப்படுத்தப்பட்டவை தென் அரைகோளமும் ஆகும். பூமத்திய ரேகையும் அதற்கு இணையாக மேலும் கீழும் வரையப்பட்டுள்ள வட்ட வடிவிலுள்ள கோடுகளையும் கவனிக்கவும். இதுவே அட்சரேகை எனப்படும். அட்சரேகைக்குக் குறுக்காக வரையப்பட்டுள்ள அரைவட்ட வடிவில் வரையப்பட்டுள்ள கோடுகளைக் கவனித்தீர்களா? இவற்றை தீர்க்க ரேகை என்கிறோம். பூமியின் எந்த ஒரு இடத்தின் அமைவிடத்தையும் இந்தக் கோடுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கலாம். புவி உருண்டையை உற்று நோக்கி அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகைகளின் தனிச்சிறப்புகளை அறிவீர்களல்லவா?

**புவி உருண்டையும் நிலப்படமும்**

கோள வடிவிலுள்ள பூமியின் மாதிரி வடிவமே புவி உருண்டை (Globe) கோள வடிவிலுள்ள புவியின் மேற்பரப்பின் சிறப்புகளை ஒரு பரந்த மேற்பரப்பில் வரைந்தபோது நிலப்படமாக மாறியது.

ST-535-10-SOC. SCI. (T)-5-VOL-1




புவி உருண்டை



உலக நிலப்படம்

கேரளாவின் நிலப்படத்தை உற்று நோக்கவும்




கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தில் A, B, C என எழுத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். அவை முறையே நிலப்படத்தின் தலைப்பு, திசை மற்றும் குறியீடாகும். ஒரு நிலப்படத்தில் இருக்க வேண்டிய முக்கிய காரணிகளே இவை. இவற்றை பயன்படுத்தியே நிலப்படத்தைப் புரிந்து கொள்கிறோம். தலைப்பு பொதுவாக நிலப்படத்தின் மேல் பகுதியில் கொடுக்கப்படும். தலைப்பு நிலப்படத்தின் உள்ளடக்கத்தைக் குறிக்கிறது. கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தில் தலைப்பைக் கண்டறியவும்.

| | | |
|---|---|---|
| **A** | தலைப்பு | கேரளா– அரசியல் நிலப்படம் |

உங்களுடைய பள்ளியின் சமூக அறிவியல் ஆய்வகத்தில் காணப்படும் வெவ்வேறு நிலப்படங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளைச் பார்க்கவும்.

வகுப்பறை மற்றும் பள்ளியின் கோட்டுப்படம் தயாரித்த போது திசையைக் குறிப்பிடும் குறியீடு கொடுத்தீர்களல்லவா? கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தில் திசையை அறிவதற்கான குறியீட்டைக் கண்டுபிடிக்கவும்

| | | |
|---|---|---|
| **B** | திசை |  |

திருச்சூருக்கு வடக்கே உள்ள கடலோர மாவட்டங்களையும் தெற்கே உள்ள கடலோர மாவட்டங்களையும் அட்டவணைப்படுத்தவும். கேரளத்திற்கு கிழக்கே அமைந்துள்ள மாநிலம் எது?

பூமியின் சிறப்புகளை அறிந்து கொள்வதற்காகவே நிலப்படத்தில் குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தில் உள்ள குறியீடுகளைக் கண்டறியவும்.

| | | | |
|---|---|---|---|
| **C** | குறியீடுகள் | - - - - மாநில எல்லை<br>——— மாவட்ட எல்லை | ☆ தலைநகரம்<br>● மாவட்ட தலைநகரம் |

உங்களுடைய பள்ளியிலுள்ள சமூக அறிவியல் ஆய்வகத்தில் உள்ள கேரள நிலப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை உற்று நோக்கவும்

**குறியீடுகள்**

| | |
|---|---|
| - - - - - - - மாநில எல்லை | ☆ தலைநகரம் |
| ——— மாவட்ட எல்லை | ● மாவட்ட தலைநகரம் |
| நதி | துறைமுகம் |
| தேசிய சாலைகள் | விமான நிலையம் |
| இரயில் பாதைகள் | மாநில சாலைகள் |

கொடுக்கப்பட்டுள்ள கேரள நிலப்படத்தில் (பக்கம் 74) மாவட்டங்களை அறிந்து கொள்வதற்காக வேறுபட்ட நிறங்கள் கொடுக்கப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்? இதுபோன்று நிலப்படங்களில் புவியின் சிறப்புகளைக் காண்பிக்க பல்வேறு நிறங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

புவி உருண்டையிலும், நிலப்படத்திலும் நீர்நிலைகளைக் குறிக்க என்ன நிறம் பயன்படுத்தப்படுகிறது?

கேரளத்தின் ஒரு நிலப்படத்தைப் பார்த்து கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள புவி சிறப்புகளுக்கான குறியீடுகளைக் கண்டறிந்து வரையவும்.

| புவி சிறப்புகள் | குறியீடுகள் |
|---|---|
| சாலை | |
| இரயில் பாதைகள் | |
| நதி | |
| துறைமுகம் | |

## வரைப்பட இயல் (Cartography)

நிலப்படங்களைத் தயாரிக்கும் அறிவியல் பிரிவே நிலப்பட இயல் அல்லது கார்ட்டோகிர∴பி ஆகும். நிலப்படங்கள் தயாரிக்கும் நபரை கார்டோகிரா∴பர் என்று அழைப்பர்.

நமது நாட்டில் நிலப்படங்கள் தயாரிக்கவும் அதனை சரிபார்க்கவும் வெளியிடவும் அனுமதிக்கப்பட்ட மத்திய அரசு நிறுவனமே நில அளவைத்துறை (சர்வே ஆ∴ப் இந்தியா). இதன் தலைமையகம் உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள டேராடூனில் உள்ளது.

உங்களுடைய பள்ளி சமூக அறிவியல் ஆய்வகத்திலுள்ள கேரள நிலப்படத்தைச் சரிபார்த்து பயிற்சித்தாளை முழுமையாக்கவும்.

| | |
|---|---|
| கேரளத்தின் தென் முனையிலுள்ள மாவட்டம் | |
| கேரளத்தின் வடக்கிலுள்ள மாவட்டம் | |
| இரண்டு மாநிலங்களோடு எல்லை பங்கிடும் மாவட்டம் | |
| பாரதப்புழை பாயும் திசை | கிழக்கிலிருந்து ............ |
| காசர்கோட்டிலிருந்து திருவனந்தபுரம் வரையுள்ள இரயில் பாதையின் திசை | வடக்கிலிருந்து ............ |
| கேரளத்தின் அண்டை மாநிலங்கள் | |

### மாவட்டங்களைக் கண்டுபிடிப்போம்



ஆசிரியரின் உதவியுடன் கேரளத்தின் அரசியல் நிலப்படம் A3 அளவில் (வண்ணப்படம்) நகல் எடுக்கவும். (மாவட்டங்களின் பெயர் இல்லாமல்) ஒவ்வொரு மாவட்டத்தையும் கவனமாக வெட்டி எடுக்கவும். வெட்டி எடுத்த மாவட்டங்களின் பாகங்களை ஒரு பெட்டியில் இடவும். வகுப்பிலுள்ள மாணவர்கள் குழுக்களாகுதல். ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் வந்து பெட்டியிலிருந்து ஒரு துண்டை எடுக்கவும். ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாவட்டத்தின் வடிவத்தை அறிந்து மாவட்டத்தின் பெயரைச் சத்தமாகக் கூறவும்.

இப்பொழுது ஒவ்வொரு குழுவிற்கும் கிடைத்த மாவட்டங்களின் அடையாள அட்டையைத் தயாரிப்போம். மாவட்டத்தின் அடையாள அட்டையில் உட்படுத்த வேண்டியவை எவையெல்லாம்?

- மாவட்டத்தின் பெயர்
- அமைப்பு
- அண்டை மாநிலங்கள் / மாவட்டங்கள்
- விமான நிலையங்கள் /துறைமுகங்கள்/ இரயில்பாதைகள்/கடற்கரை
- வேறு சிறப்புகள்

மாவட்டங்களின் அடையாள அட்டையைத் தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.

**மாவட்டத்தின் அடையாள அட்டை**

நிலப்பட வாசிப்பின் அடிப்படைக் கருத்துகளை அறிந்துகொண்டீர்களல்லவா? இனி இந்தியாவின் நிலப்படத்தைப் பரிசோதித்து விவரங்களைக் கண்டறிவோம்.




கேரளம் இந்தியாவின் ஒரு மாநிலம். இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உள்ளன தெரியுமா?

இந்தியாவிலுள்ள மாநிலங்கள், தலைநகரங்கள், யூனியன் பகுதிகள் ஆகியவற்றின் பட்டியலைத் தயாராக்குங்கள்.



இந்தியாவின் எல்லை, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், அண்டைநாடுகள், போன்றவற்றை அடையாளப்படுத்திய நிலப்படத்தை உற்றுநோக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை முழுமையாக்கவும்.

| குறிப்புகள் | |
|---|---|
| இந்தியாவின் கிழக்குப்பகுதியில் உள்ள கடல் | வங்காள விரிகுடா |
| இந்தியாவின் மேற்குப்பகுதியில் உள்ள கடல் | அரபிக்கடல் |
| இந்தியாவின் தலைநகரம் | ...................... |
| இந்தியாவின் வடக்குப் பகுதியிலுள்ள யூனியன் பிரதேசம் | ...................... |
| அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் எந்தப் பகுதியில் அமைந்துள்ளது? | ...................... |
| இந்தியாவின் தெற்குப் பகுதியிலுள்ள அண்டை நாடு | ...................... |
| இந்தியாவின் தென் முனையிலுள்ள யூனியன் பிரதேசம் | ...................... |
| இந்தியாவின் அண்டை நாடுகள் | பாகிஸ்தான்<br>......................<br>...................... |



இந்திய மாநிலங்களின் பெயர்கள் எழுதிய காகித துண்டுகளை ஒரு பெட்டியில் இடவும். குழந்தைகளை மூன்று பேர் கொண்ட குழுவாக்கவும் குழுவிலுள்ள ஒருவர் பெட்டியிலிருந்து ஒரு காகிதத் துண்டை எடுக்கவும். அவர்களுக்குக் கிடைத்த மாநிலத்தைக் குறித்து அட்லஸ், நிலப்படம் போன்றவற்றின் உதவியோடு குறிப்பு தயாரிக்கவும். குறிப்பில் என்னென்ன விவரங்களை சேர்க்கலாம்.

- மாநிலத்தின் பெயர்
- தலைநகரம்
- அண்டை நாடுகள்
- அண்டை மாநிலங்கள்
- முக்கிய நகரங்கள்
-
-
-

அஜி தயாரித்த குறிப்பைப் பார்க்கவும்

## உத்திரபிரதேசம்

எனது இருப்பிடம் இந்தியாவின் வடக்குப் பகுதியில் உள்ளது. எனது எல்லையில் ஒரு நாடு உள்ளது. அதுதான் நேப்பாளம். அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் எட்டு மாநிலங்களின் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறேன். அதிகமாக கரும்பு உற்பத்தியும் செய்வதால் இந்தியாவின் சர்க்கரைக் கிண்ணம் என்று என்னை சிறப்பிக்கிறார்கள். என் மாநில நடன வடிவம் 'கதக்' ஆகும். எனது முக்கிய நகரங்களின் பெயர்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள். கான்பூர், லக்னோ, வாரணாசி, ஆக்ரா, அலகாபாத் போன்றவை. அசோக மன்னருடன் தொடர்புடைய சாரநாத்திலுள்ள தூண் என் புகழை உலகம் முழுவதும் பரப்புகிறது.

போர்த்துகீசிய பயணியான வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு வந்த பயணத்தைக் குறித்துள்ள குறிப்பை வாசிக்கவும்.



1497 ஜூலை 8

போர்ச்சுகல்லிலுள்ள லிஸ்பன் துறைமுகத்திலிருந்து நான்கு பாய்மரக்கப்பல்களில் 170 பேர் கொண்ட குழுவினருடன் வாஸ்கோடகாமா இந்தியாவைத் தேடி பயணம் செய்தார். காற்றின் உதவியால் தென்கிழக்காகப் பயணித்து ஆப்பிரிக்காவின் தென்பகுதியை அடைந்தார். பின்பு ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரை வழியாக வடக்கு நோக்கி பயணித்து மலிந்தி துறைமுகத்தை அடைந்தார். அங்குள்ள மாலுமிகளின் அறிவுரைகளின் படி பருவக்காற்றின் உதவியுடன் 1498 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதி இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கோழிக்கோட்டிற்கு அருகிலுள்ள காப்பாடு துறைமுகத்திற்கு வந்தடைந்தார். வாஸ்கோடகாமாவும் அவரது குழுவினரும் ஐரோப்பாவிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரம் துணிச்சலாக பயணம் செய்து வரலாறு படைத்தனர்.

வாஸ்கோட காமாவின் கடல் பயணத்தைக் கவனியுங்கள்.




வாஸ்கோடகாமா ஐரோப்பியாவிலிருந்து எந்தெந்த பெருங்கடல்களின் வழியாக பயணம் செய்து இந்தியாவிற்கு வந்தார்? உலக நிலப்படத்தை உற்று நோக்கி இந்தப் பெருங்கடல்களைக் கண்டறியவும்

- 
- 

வேறு பெருங்கடல்கள் எவை?

- 
- 
- 

இந்தப் பெருங்கடல்கள் எல்லாம் ஒன்றொடொன்று இணைந்துள்ளதா?


புவி உருண்டையை உற்று நோக்கி மிகப்பெரிய பெருங்கடலை கண்டறியவும்

நீங்கள் உற்றுநோக்கிய உலக நிலப்படத்தில் பெருங்கடல்கள் உடன் பரந்த நிலப்பரப்புகளையும் பார்த்தீர்களல்லவா! பெருங்கடல்களுக்கு இடையே அமைந்திருக்கும். பரந்த விரிந்த நிலப்பகுதிகளே கண்டங்கள் எனப்படும்.

நிலப்படம், புவி உருண்டை போன்றவற்றை உற்று நோக்கி கண்டங்கள் எவை எனக் கண்டு பிடியுங்கள்.

- இந்தியா எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது?
- பெரும்பாலான கண்டங்கள் கடல்களால் சூழப்பட்டுள்ளன. கடல்களால் சூழப்பட்டுள்ள கண்டங்கள் எவை?

கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்று நோக்கவும். கொடுக்கப்பட்டுள்ள கண்டங்களின் நிறத்தை நிலப்படத்திலுள்ள கண்டங்களுக்குக் கொடுக்கவும். நிறம் கொடுத்த பின்பு கண்டங்களின் பெயர்களையும் எழுதுவீர்கள் அல்லவா?




ST-535-11-SOC. SCI. (T)-5-VOL-1

உலக நிலப்படம் மற்றும் அட்லஸின் உதவியோடு பயிற்சித்தாளை முழுமையாக்கவும்.

| பயிற்சித்தாள் | |
|---|---|
| **தனிச்சிறப்புகள்** | **கண்டங்கள்** |
| அட்லாண்டிக் பெருங்கடலுக்கு மேற்கே காணப்படும் கண்டங்கள் | ...................... , ...................... |
| இந்தியப் பெருங்கடலுக்குக் கிழக்கே அமைந்துள்ள கண்டம் | ...................... |
| மிகப்பெரிய கண்டம் எது? | ...................... |
| அட்லாண்டிக் பெருங்கடலுக்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் இடையே உள்ள கண்டம் | ...................... |

## கண்டங்களைக் கண்டறிந்து பெயர் எழுதவும்









கண்டங்களை அறிந்து கொண்டீர்கள் அல்லவா? இனி ஏழு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் கண்டங்களின் பெயர் கொடுக்கவும். ஒவ்வொரு குழுவும் அட்லஸ் புவி உருண்டையைப் பயன்படுத்தி அந்தந்த கண்டங்களின் அடையாள அட்டை தயாரிக்கவும்.

மக்களின் வாழ்வில் நிலப்படங்களுக்கு மிக முக்கியத்துவம் உண்டு. புவியியல், பாதுகாப்பு, சுற்றுலா, நிர்வாகம், போக்குவரத்து போன்ற துறைகளில் பல்வேறு வகையான நிலப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகள் போன்ற இயற்கைப் பேரிடர்களும் பிற விபத்துகள் ஏற்படும் போதும் பேரிடர் பகுதிக்கு விரைவாகச் சென்று நிவாரணப்பணிகளை மேற்கொள்ள நிலப்படங்கள் மற்றும் பாதை வரைபடங்கள் பயன்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் நாம் நிலப்பட வாசிப்பு வாயிலாகக் கடந்து செல்லும் பல சூழல்களும் ஏற்படுவதுண்டு. நவீன உலகில் வாழக்கையை கட்டமைப்பதற்கு நிலப்பட வாசிப்பு இன்றியமையாத காரணியாகும்.

## தொடர் செயல்பாடுகள்

1. ஆசிரியரின் உதவியோடு உங்களுடைய பள்ளியின் ஒரு கோட்டுப்படம் தயாரிக்கவும். தயாரித்த கோட்டுப்படத்தைப் பள்ளியில் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள்.
2. கேரளத்தின் நிலப்படத்தைச் சரிபார்த்து முக்கியமான சுற்றுலா தலங்களை அட்டவணைப்படுத்தவும். இணையத்தின் வாய்ப்பை பயன்படுத்தி நீங்கள் இருக்கின்ற இடத்திலிருந்து செல்ல விரும்பும் சுற்றுலாதலத்திற்கு விரைவாகச் செல்வதற்கான பாதையையும் தூரத்தையும் கண்டறியவும்.
3. இந்தியாவின் கோட்டுப்படத்தை சார்ட்டில் வரையவும். மாநிலங்கள், தலைநகரங்கள், யூனியன் பிரதேசங்கள், போன்றவற்றை அடையாளப்படுத்தவும். மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் வெவ்வேறு நிறம் கொடுக்கவும். தயாரித்த சார்ட்டுகளை வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.
4. நவம்பர் 1 கேரளப் பிறவி தினத்தை முன்னிட்டு தொழில்நுட்பத்தின் உதவியோடு 'கேரளம் – நிலப்பட வாசிப்பு வினாவிடைப் போட்டி' நடத்தவும். போட்டியில் எவற்றையெல்லாம் உட்படுத்தலாம்.

1.


**கேரளம் – நிலப்பட வாசிப்பு வினாவிடைப் போட்டி – கருப்பொருள்**

- சுற்றுலா மையங்கள்
- நதிகள்
- துறைமுகங்கள்
- ஏரிகள்
- விமான நிலையங்கள்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்
- விழாக்கள்
- ..........................................

6

# மக்கள் மக்களால்

வளர்ச்சி பற்றி காரசாரமான விவாதம் : மாணவர் நட்பு பாராளுமன்றம் புதிய அனுபவம்



மஞ்சாடி மலை : பஞ்சாயத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை உறுப்பினராகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் நட்பு பாராளுமன்றம் கவனத்தை ஈர்த்தது. நடைப்பாதை அமைத்தல், ஓடைகளுக்கு மூடி அமைத்தல், தெருநாய் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல், தெரு விளக்குகள் அமைத்தல், குப்பைகளை அகற்றும் திட்டங்களை வகுத்தல், பூங்காக்கள் அமைத்தல் போன்ற பல கோரிக்கைகளை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தனர். பஞ்சாயத்து தலைவர் கூட்டத்தைத் துவக்கி வைத்தார். மாணவர் நட்பு பாராளுமன்றத்தில் முன்வைத்த கோரிக்கைகளை இனிவரும் கூட்டத்தில் கலந்துரையாடலாம் என்று தலைவர் உறுதியளித்தார்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தியைக் கவனித்தீர்களல்லவா? நாட்டின் முன்னேற்றம் தொடர்பான எந்தெந்த கோரிக்கைகளை மாணவர்கள் நட்பு பாராளுமன்றத்தில் முன்வைத்தனர்?

- 
- 
- 

உங்களுடைய பள்ளிக்கூடத்திற்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்கள் எவையென கலந்துரையாடுங்கள்.

இந்த தேவைகளை ஆசிரியர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடைமுறைப்படுத்த முயற்சிப்பீர்களல்லவா?

உங்களுடைய பகுதியிலும் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் நடைபெறுவது உண்டல்லவா? வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி கலந்துரையாடுவதும் தீர்மானம் எடுப்பதும் யார்?

பஞ்சாயத்து தலையிட்டது. குடிநீர் பற்றாக்குறைக்குத் தீர்வு ஆனது.

ஆரம்ப சுகாராதர நிலையத்தில் தினமும் மருத்துவர்களின் சேவை உறுதி செய்யப்படும் பஞ்சாயத்து தலைவர்

வார்டு சபையில் கொண்டுவந்த பரிந்துரைகள் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என கவுன்சிலர் உறுதியளித்தார்.

அனைவருக்கும் மின்சாரம்; விரைவில் அறிவிக்கப்படும்

சாலையோர குப்பைப் பிரச்சனை: சி.சி.டி.வி கேமராக்கள் உடனடியாகப் பொருத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.

ஒரு பகுதியிலுள்ள கிராமசபை/வார்டு சபையில் எடுக்கப்பட்ட முக்கியமான கலந்துரையாடலின் முடிவுகளே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இங்கே உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மக்களுக்கு ஆட்சிக்காரியங்களில் நேரடியாக பங்குபெற வாய்ப்பு கிடைக்கிறது. மக்கள் நேரடியாகவோ அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ நிர்வாகத்தில் முடிவுகளை எடுக்கும் முறையே மக்களாட்சி எனப்படுகிறது.

### உள்ளாட்சி அமைப்புகள்

கிராமப் பகுதிகளில் மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்புகளான கிராம பஞ்சாயத்து, புளோக் பஞ்சாயத்து, மாவட்ட பஞ்சாயத்து போன்றவையும் நகர்புறங்களில் நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்றவையும் உட்பட்டதே உள்ளாட்சி அமைப்புகள்.

நீங்கள் வசிக்கும் உள்ளாட்சி அமைப்புகளின் பெயரை உட்படுத்தி அடையாள அட்டையைத் தயாரிக்கவும். (கிராம பஞ்சாயத்து, புளோக் பஞ்சாயத்து, மாவட்ட பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி)

மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே மக்களாட்சி.

–ஆபிரகாம் லிங்கன்




மக்களாட்சி பற்றிய எனது கருத்து என்னவென்றால் அதன் கீழ் மிகவும் பலவீனமானவர்களுக்கும் பலமானவர்களுக்கும் சம வாய்ப்பு இருக்க வேண்டும்.

– மகாத்மா காந்தி



## மக்களாட்சி: வேர்களைத் தேடி




மேலே கொடுக்கப்பட்டுள்ள ஐரோப்பாவின் நிலப்படத்தைக் கவனித்தீர்களல்லவா? ஐரோப்பாவின் வரைபடத்தில் A என்றும் B என்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இரண்டு நாடுகள் எவையென எழுதவும்.

A .......................................

B .......................................

இந்த நாடுகளுக்கு மக்களாட்சியின் தோற்றத்தோடு சில தொடர்புகள் உள்ளன. அவற்றைப் பார்ப்போமா?

பழமையான கிரேக்கத்திலுள்ள ஏதன்சில்தான் மக்களாட்சியின் முதல் வடிவம் உருவானது. பொதுவான காரியங்களில் முடிவெடுப்பதற்கான செயலில் அனைத்து பிரிவு மக்களையும் உட்படுத்தவில்லை எனினும் மக்களாட்சி என்ற கருத்தை வெளியிடுவதில் ஏதன்சின் பங்கு முக்கியமானதாகும்.

இன்று வழக்கத்திலுள்ள மக்களாட்சி முறையின் துவக்கம் ஐக்கிய பேரரசின் பகுதியான இங்கிலாந்திலிருந்துதான்.தேர்தல், மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி, பாராளுமன்றம் போன்றவை உருவானதும் இங்கேதான்.

கிரேக்கம், இங்கிலாந்து போன்ற நாடுகளைக் குறித்து அதிக விவரங்களை ஆசிரியரின் உதவியோடு கண்டறிவீர்களல்லவா?



பழமையான கிரேக்க வரலாற்று அறிஞரான ஹெரோடோட்டஸ் என்பவர்தான் 'டெமொகிரஸி' (ஜனநாயகம்) என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார். டெமோஸ் (மக்கள்) குரோட்டஸ் (அதிகாரம்) போன்ற கிரேக்க வார்த்தைகள் இணைந்தே டெமாக்கிரஸி (மக்களுடைய அதிகாரம்/ஆட்சி) என்ற சொல் உருவானது.




## மக்களாட்சி இரண்டு விதம்

நீங்கள் கிராமசபை/வார்டு சபை கூடுவதைப் பார்த்திருக்கிறீர்களா?
அங்கே என்னென்ன கலந்துரையாடப்படுகிறது?
கிராம சபையில் பங்கெடுப்பவர்கள் யார்? யார்?

### கிராமசபை என்றால் என்ன?

ஒரு பகுதியின் ஆட்சி/வளர்ச்சி செயலில் அனைத்து மக்களையும் உட்படுத்தவும் முடிவுகள் எடுக்கவும் வாய்ப்பு கிடைக்கின்ற இடமே கிராம சபைகள். கிராமப் பஞ்சாயத்தில் உள்ள ஒவ்வொரு வார்டிலும் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள அனைத்து மக்களும் கிராம சபையின் உறுப்பினர்கள் ஆவார். நகரங்களில் இது வார்டு சபை என அறியப்படுகிறது.

கிராமசபை கூடும் படத்தை உற்று நோக்கவும்




கிராம சபையில் மக்களுக்கு நேரடியாக ஆட்சி நிர்வாகத்தில் கருத்துக்களைக் கூறவும் முடிவுகள் எடுக்கும் செயல்களில் பங்குபெறவும் வாய்ப்பு கிடைக்கிறது.

### நேரடி மக்களாட்சியும் / பங்களிப்பு மக்களாட்சியும்

மக்கள் நேரடியாக ஆட்சி நிர்வாகத்தில் பங்கேற்கும் ஆட்சி முறையே நேரடி மக்களாட்சி அல்லது பங்களிப்பு மக்களாட்சி ஆகும். மக்கள்தொகை குறைவான, புவிப்பரப்பு குறைந்த பகுதிகளில் நேரடி மக்களாட்சி சாத்தியமாகிறது.

கிராம சபைத் தொடர்பாக அதிகமான தகவல்களைக் கண்டறியுங்கள்.

- 
- 

சட்டமன்றத்தின் படத்தைக் கவனிக்கவும்




கேரள சட்டமன்றம்

சட்டமன்றத்தில் நமக்கு நேரடியாகப் பங்கேற்க முடியுமா?
சட்டமன்றத்தில் நமக்காகப் பேசுவது யார்?

உங்களுடைய சட்டமன்றத் தொகுதி எது?

...................................................................................................

உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் யார்?

...................................................................................................

### கேரள சட்டமன்றம்



கேரள மாநிலத்தின் சட்ட உருவாக்கச் சபையே கேரள சட்டமன்றம். சட்டமன்றத்தின் தலைமையகம் திருவனந்தபுரத்தில் உள்ளது. 1888 இல் நிறுவிய திருவிதாங்கூர் லெஜிஸ்லேற்றிவ் கவுன்சில், 1904 இல் நிறுவிய ஸ்ரீ மூலம் பிரஜாசபை, 1949 இல் நிறுவிய திரு – கொச்சி சட்ட உருவாக்க சபை போன்றவையும் கேரள சட்டமன்றத்தின் முன்னோடிகளாகும். கேரள சட்டமன்றத்தின் முதல் கூட்டம் 1957 ஏப்ரல் 27 இல் நடைபெற்றது. எல்லா வருடமும் ஏப்ரல் 27 சட்டமன்ற தினமாகக் கொண்டாடப்படுகிறது.

கிராம சபைகளில் மக்கள் நேரடியாகப் பங்கேற்கும் போது சட்டமன்றத்தில் நமது சட்டமன்ற உறுப்பினர்களே நமக்காகப் பேசுவார்கள்.

### மறைமுக மக்களாட்சி / பிரதிநிதித்துவ மக்களாட்சி

மக்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் மக்களுக்காக ஆட்சி நடத்தும் மக்களாட்சி முறையே மறைமுக மக்களாட்சி அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி. இந்தியாவைப் போன்ற மக்கள் தொகையும் பரந்த நிலப்பரப்பும் உள்ள நாடுகளில் பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை நடைமுறையில் உள்ளது.

நேரடி மக்களாட்சியையும், மறைமுக மக்களாட்சியையும் ஒப்பிட்டு அட்டவணையை முழுமையாக்கவும்.



| நேரடி மக்களாட்சி | மறைமுக மக்களாட்சி |
|---|---|
| • மக்கள் தொகை குறைந்த நாடுகளில் சாத்தியமாகும். | • மக்கள் தொகை அதிகமான நாடுகளில் நடைமுறையில் உள்ளது |
| • | • |
| • | • |
| • | • |

அதிக நாடுகளைக் கண்டடைவோம்.



உலகிலேயே மிகப்பெரிய மக்களாட்சி நாடு இந்தியா ஆகும்

சவுதி அரேபியாவில் புதிய அரசர் பதவி ஏற்றார்.

ஆப்கானிஸ்தானில் மக்களாட்சி முடிவுற்றது.

சுவிட்சர்லாந்தில் இப்போதும் பங்களிப்பு மக்களாட்சியே

மேலே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புச் செய்திகளைக் கவனித்தீர்களல்லவா! இதிலிருந்து மக்களாட்சி ஆட்சிமுறை நடைமுறையில் உள்ள நாடுகள் எவை எனக் கண்டறிந்து நாடுகளை எழுதுங்கள்.

- 
- 
- 
- 

ST-535-12-SOC. SCI. (T)-5-VOL-1

**மக்களாட்சி தனிச்சிறப்புகள்**

- மக்களாட்சி முறையில் மக்களுக்கே முழுமையாக அதிகாரம்
- சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துகின்ற சட்டமுறை
- சுதந்திரமும் நேர்மையுமான தேர்தல் முறை
- மக்களையும் ஆட்சி அமைப்பையும் இணைக்க உதவுகின்ற சுதந்திர ஊடகங்கள்
- அரசை விமர்சிப்பதன் வழியாக மேம்படுத்த உதவும் எதிர்க்கட்சி
- சுதந்திரமும் நடுநிலைமையான நீதித்துறை

மக்களாட்சி முறையின் தனிச்சிறப்புகளை வகுப்பறையில் கலந்துரையாடவும்

## தேர்தல் வழியாக










தேர்தலுடன் தொடர்புடைய படங்கள் தரப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். உங்களுக்குத் தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பு கிடைத்துள்ளதா? பள்ளிக்கூட பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்தது எவ்வாறு? உங்களுடைய பெற்றோர்கள் பொதுத்தேர்தலில் வாக்களிப்பார்கள் அல்லவா?

பொதுத்தேர்தலில் வாக்களிக்க உங்களுக்கு வாய்ப்பு கிடைக்காதது ஏன்?

### வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை

எந்த ஒரு பாகுபாடும் இல்லாமல் குறிப்பிட்ட வயது நிரம்பிய அனைவருக்கும் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமையை அளிப்பது வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை எனப்படும். 1989 வரை இந்தியாவில் வாக்களிப்பதற்கான வயது 21 ஆக இருந்தது. இப்பொழுது அது 18 வயது ஆகும்.

18 வயது நிரம்பியதால் மட்டும் ஒருவருக்கு தேர்தலில் வாக்களிக்க முடியுமா?

## தேர்தல்: பல்வேறு நிலைகள்


### பள்ளிக்கூட பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு

| | | |
|---|---|---|
| வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கடைசிநாள் | ஜீலை 31 | 04 pm வரை |
| வேட்பு மனுவை பரிசோதித்து ஏற்றுக்கொள்வதற்கான கடைசிநாள் | ஆகஸ்ட் 3 | 12 pm வரை |
| வேட்பு மனுவைத் திரும்பப் பெறுவதற்கான நாள் | ஆகஸ்ட் 4 | 04 pm வரை |
| வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடும் நாள் | ஆகஸ்ட் 7 | 10 am முதல் |
| தேர்தல் நாள் | ஆகஸ்ட் 9 | 11 am–01 pm வரை |
| வாக்கு எண்ணிக்கையும் முடிவுகள் அறிவிக்கும் நாள் | ஆகஸ்ட் 9 | 02 pm |
| பள்ளிக்கூட பாராளுமன்ற முதல் கூட்டம் | ஆகஸ்ட் 10 | 02 pm |

பள்ளிக்கூட பாராளுமன்ற தேர்தலுடன் தொடர்புடைய எந்தெந்த தகவல்கள் அறிவிப்பு பலகையில் தரப்பட்டுள்ளன? அட்டவணைப்படுத்தவும்

- தேர்தல் அறிவிப்பு
-
-
-
-
-


நமது நாட்டில் உள்ள தேர்தல்கள் இதுபோன்று பல்வேறு நிலைகளாக நடைபெறுகின்றது. அவை எவை எனப் பார்க்கலாம்?




தேர்தலில் பல்வேறு நிலைகளை உட்படுத்திய ஒரு மாதிரித் தேர்தலை வகுப்பறையில் நடத்தவும்

## தேர்தல் எதற்காக?

மக்களாட்சி முறையில் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறை தேர்தல் எனப்படும். இது தவிர மேலும் சில கடமைகளையும் தேர்தல் நிர்வகிக்கின்றது.




தேர்தலின் பல்வேறு கடமைகளைக் குறித்து எழுதிய துண்டுச்சீட்டுகள் தயாராக்கி ஒரு பெட்டியில் இடவும். வகுப்பில் உள்ள மாணவர்களை பல்வேறு குழுக்களாகப் பிரித்து குழு உறுப்பினர்களைத் தேர்வு செய்யவும். ஒவ்வொரு குழுவிலும் உள்ள உறுப்பினர்கள் பெட்டியில் இருந்து துண்டுச் சீட்டுகளை எடுக்க வேண்டும். கிடைத்த துண்டுச் சீட்டில் உள்ள தேர்தல் கடமையைக் குறித்து தங்களது குழுவில் கலந்துரையாடவும். கலந்துரையாடல் குறிப்பு தயாரித்து பொதுக்குழுவில் வெளியிடவும்.


### இந்தியத் தேர்தல் ஆணையம்

ஜனாதிபதி, துணை ஜனாதிபதி போன்ற பதவிகளுக்கும் பாராளுமன்றம், மாநில சட்டசபைகள் போன்ற இடங்களுக்கும் சுதந்திரமான, நேர்மையான தேர்தலை நடத்துதல் தேர்தல் ஆணையத்தின் பொறுப்பு. மூன்று அங்கத்தினர் உடைய தேர்தல் ஆணையக்குழுவில் முக்கிய தேர்தல் ஆணையர் உட்பட அனைவரையும் நியமிப்பது குடியரசு தலைவர் ஆவார்.




## மக்களாட்சி ஒரு வாழ்க்கை முறை








படத்தை உற்று நோக்கவும். இங்கு தீர்மானங்கள் எடுப்பவர் யார்?

அனைவரது கருத்துகளையும் கருத்தில் கொண்டு தீர்மானங்கள் எடுக்கும் பொழுது மக்களாட்சி முறை குடும்பத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## மக்களாட்சி முறை பள்ளிக்கூடத்திலும்








மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்று நோக்கவும் இவை மக்களாட்சி முறையை உறுதிப்படுத்துவதில் எந்த அளவில் பங்கு வகிக்கின்றன? கலந்துரையாடவும்.


மாணவர்களின் கருத்துகளையும் விருப்பங்களையும் கருத்தில் கொள்வதுடன், அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில் சமத்துவமும் சம உரிமையையும் உறுதிப்படுத்தும் போதுதான் கல்வி நிலையங்களில் மக்களாட்சி முறை உறுதிப்படுத்தப்படுகிறது.

## மக்களாட்சிமுறை பொது இடங்களில்

கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் எங்கெங்கு மக்களாட்சி கடைபிடிக்கப்படுகிறது?









பொது இடங்களைச் சுத்தமாக வைத்தல், பிறரின் விருப்பங்களுக்கு மதிப்பு அளித்தல், பொது சட்டங்களைக் கடைபிடித்தல் போன்றவை மக்களாட்சி வாழ்க்கை முறைக்குத் தேவையானவையாகும்.

### எந்த அளவில் மக்களாட்சி

கிழேகொடுக்கப்பட்டுள்ள சரிபார்ப்புப் பட்டியலை (check list) நிரப்புக. மக்களாட்சி வாழ்க்கை முறையை நாம் எந்த அளவில் பின்பற்றுகிறோம் என்று கண்டுபிடிக்கவும்.

| | |
|---|---|
| வீட்டில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும் போது எனது கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது | உண்டு/ இல்லை |
| பொது இடங்களையும் பொது வாகனங்களையும் தூய்மையாக பாதுகாப்பதுண்டு | உண்டு/ இல்லை |
| பள்ளிக்கூடத்தில் இருந்து கல்விச்சுற்றுலாவிற்குச் செல்ல வேண்டிய இடங்களைத் தீர்மானிக்கும் பொழுது கருத்துக் கூறுவதுண்டு | உண்டு/ இல்லை |
| பயணம் செய்யும் பொழுது சகப்பயணிக்கு சிரமங்கள் ஏற்படும் முறையில் நடந்துக்கொள்வதில்லை | உண்டு/ இல்லை |
| போக்குவரத்து விதிகளை பின்பற்றுகிறேன். | உண்டு/ இல்லை |
| விருப்பமான பாடங்களைக் கற்பதற்கான சுதந்திரம் உள்ளது | உண்டு/ இல்லை |
| பொது இடங்களில் குப்பைகளை வீசி எறிவதில்லை | உண்டு/ இல்லை |

ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதுடன் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மக்களாட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். உணவு, உடை, தொழில் ஆகியவற்றை தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரமும் கருத்துகளை மனம் திறந்து கூற இயலும் சூழலும் மக்களாட்சி சமூகத்தின் சிறப்புகள் ஆகும். மேலும் சம பதவி, சம வாய்ப்பு, பொருட்கள் மீதுள்ள சம உரிமை போன்ற சூழல்களும் ஏற்படும் போதுதான் மக்களாட்சி முறை முழுமையடைகிறது.

## தொடர் செயல்பாடுகள்

1. தேர்தலுடன் தொடர்புடைய பல்வேறு படங்களைத் திரட்டி டிஜிட்டல் படத்தொகுப்பு தயார் செய்யவும்.
2. கிராமசபை/வார்டு சபை, சட்டசபை போன்றவற்றைக் குறித்து அதிகமான தகவல்களைத் தெரிந்துகொள்வதற்காக வார்டு உறுப்பினர்/கவுன்சிலர் MLA போன்றவர்களுடன் நேர்காணல் நடத்துவதற்குத் தேவையான வினாநிரலை ஆசிரியரின் உதவியுடன் தயார் செய்யவும். கிராமசபை/ வார்டு சபை, சட்டசபை, போன்றவற்றை பார்வையிட ஏற்பாடு செய்யவும்.
3. மக்களாட்சி முறையின் சிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு கருத்தரங்கு நடத்தவும்.
4. எல்லா நாடுகளிலும் வாக்களிப்பதற்கான வயது 18 தானா? பல்வேறு நாடுகளில் உள்ள வாக்களிப்பதற்கான வயதைக் கண்டுபிடிக்கவும்.
5. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (இ.வி.எம்) மாதிரியை குழுவாகத் தயாரித்து சமூக அறிவியல் ஆய்வகத்தில் காட்சிப்படுத்தவும்

# குறிப்புகள்



ST-535-13-SOC. SCI. (T)-5-VOL-1

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

அன்பார்ந்த குழந்தைகளே,

உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்.


தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12. தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring** : www.nireekshana.org.in*